முரசொலி
செல்லப்பன

கற்பனை உரையாடல்

['தலை கொடுத்தேனும் தாயகத்து மானத்தைக் காப்பேன்'—என்று முழங்கி—உயிர் கொடுத்து உறுதி காத்த கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட புளியமரமும் அதன் பக்கத்திலே இருப்பதாகக் கற்பனைச் செய்யப்படுகிற வேப்ப மரமும் பேசிக் கொள்ளுகின்றன், சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற இந்த நேரத்திலே!]

மரங்கள் பேசுகின்றன!

[பாஞ்சாலங் குறிச்சியிலே ஒரு பழைய வயதான புளிய மரம்; அதன் பக்கத்திலே சமீபத்தில் நட்டு வளர்க்கப் பட்ட ஒரு சிறு வேப்பமரம்; வேப்பமரத்தடியிலே உள்ள கடவுளுக்கு அன்று தடபுடலாக பூசை நடக்கிறது. பல்ப்பல ஆடுகளும் கோழிகளும் பலியிடப்படுகின்றன. எனவே வேப்பமரம் புளிய மரத்தைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கிறது.]

வேப்ப மரம் : என்ன தாத்தா! நீயும்தான் நான் பிறப்பதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்து இந்த இடத்திலே இருக்கிறாய்! உனக்கு யாராவது தலை வணங்கியதுண்டா?...பார், என் காலடியில் எத்தனை பேர் வீழ்ந்து வணங்கி விட்டுச் செல்கிறார்கள்! ஆனால் உன்னைத் திரும்பியாவது பார்த்தார்களா? அது ஏன் தெரியுமா?...

புளிய மரம் : எவன் தம்பி இந்தக் காலத்திலே நன்றி மறக்காமல் வாழ்கிறான்!

"எந்நன்றி கொன்றார்க்கும்
—உய்வுண்டாம், உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்று வள்ளுவர் பாடினாரே தவிர......அவர் பாட்டைப் படிப்பவர்கள், யாரும் அதன்படியா நடக்கிறார்கள்? நான் கட்டபொம்மன் வாழ்ந்த காலத்திற்கு முன்னிருந்து தமிழகத்து மக்களுக்கு இனிய நிழலையும், புளிப்பான புளியம்பழத்தையும் தந்து வருகிறேன்! இந்த வட்டாரத்திலேயே என் வயதுடைய ஏதாவதொரு புளியமர முண்டா? ஆனால் என்னை யார் திரும்பிப் பார்க்கிறார்கள்?

வேப்ப மரம் : உன்னை யார்தான் திரும்பிப் பார்ப்பார்கள்? கட்டபொம்மன் உயிரைக் குடித்த கொலைகாரப் பாவியல்லவா நீ?

புளிய மரம் : ஆமாம்!......அப்படித்தான் நீ கூறுவாய்! ஆனால் கட்டபொம்மனை ஒவ்வொரு நாளும் நினைந்து நினைந்து நெஞ்சுருகுபவன் நான்—ஒருவன்தானென்பதை நீ அறிவாயா என்ன! முதன் முதலிலே 'வெள்ளையனே! வெளியே போ!' என வீர முழக்கம் செய்த பாஞ்சாலங் குறிச்சிப் போர் வீரனை மறந்துவிட்டு நூற்றாண்டு விழா கொண்டாடுகிறார்களே! வெள்ளம் வருமுன்னே அணைபோட அல்லும் பகலும் பாடுபட்ட அரசனல்லவா அவன்? ஆனால் அவனுக்குப் பின்னால் ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டு அல்லலுற்று, அவதியுற்றோரில் அவனைக் காட்டிக் கொடுத்த துரோகிகள்தான், யாவரையும்விட பெரிதும் இன்னலுற்றார்களென்பதை நீ அறிவாயா? "நன்றி மறப்பது நன்றன்று"—எனவே நன்றி மறந்தவர்கள் உள்ள அமைதியோடு நீண்ட நாட்கள் வாழ முடியாது!

ஆனால் தம்பி! நீ என்னையும் அந்தப் பட்டியலில் சேர்த்துவிடாதே! ஏதோ கால வெள்ளத்திலே நான் அந்தக் கொடுமை செய்யும் கருவியாக இருக்க நேர்ந்தது! கட்டபொம்மன் கழுத்தை நெறிக்க என் உள்ளம மட்டும் இடம் தருமா? அவன் உயிர் துடிக்கும்பொழுது என் உள்ளமும் துடித்தது! என்ன செய்வேன்? மனிதர்களைப்போன்று நான் நகர முடியுமா? என் கிளைகளை வளைத்துப் பார்த்தேன்! ஆனால் அந்தோ! சில விநாடிகளில் இணையற்ற வீரனின் ஆவி தமிழ் நாட்டுத் துரோகிகளைச் சபித்துக் கொண்டே மறைந்தது!

வேப்ப மரம் : என்ன இருந்தாலும் கட்டபொம்மனைக் கொன்றது நீதானே! ஆதலால்தான மக்கள் உன்னை மறந்து விட்டார்கள்!

புளிய மரம் : என்னை மறந்துவிட்டுப் போனால் போகிறார்கள்! ஆனால் அந்த மாபெரும் வீரனையே மறந்து விட்டார்களே! ஏராளமான பொருட்செலவிலே எல்லோருக்கும் சிலை எழுப்பும் பொழுது, முதன் முதலில் நம் நாட்டின் விடுதலைப் போரை ஆரம்பித்து வீர மரணம் எய்திய அந்தப் பிதாவையே மறந்து விட்டார்களே! இதிலே கூடவா தென்னிந்தியருக்குச் சலுகை தரக் கூடாது? பெற்ற சுதந்திரத்தை உல்லாசமாகத் தானே அனுபவித்துக் கொள்ளும் வடநாடு, தென்னாட்டின் இணையற்ற வீரனை வாய் மூலமாவது பாராட்டக் கூடாதா? சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கட்டபொம்மன் பெயரை ஒப்புக்காகவாவது ஒலிக்க வேண்டுமே! நம் நாட்டின் குடியரசுத் தலைவர் ராசேந்திர பிரசாத் மக்களுக்கு ஒரு நீண்ட செய்தியனுப்பியிருக்கிறார்— அதிலே வடநாட்டுத் தியாகிகளை வானளாவப் புகழ்ந்திருக்கிறாரே யொழிய, கட்டபொம்மன் பெயரையோ அல்லது கப்பலோட்டிய தமிழன் பெயரையோ குறிப்பிட வேண்டுமே! எப்படி மக்களெல்லாம் உன்னைச் சூழ்ந்து வணங்கிவிட்டு, கட்டபொம்மன் தந்தை செகவீர கட்டபொம்மன் காலத்திலிருந்து மக்களுக்குத் தொண்டு செய்யும் என்னைத் திரும்பியும் பாராமல் செல்கிறார்களோ, அபபடித்தான் இதுவும்!

வேப்ப மரம் : சரிதான்! கடைசியில் என்னையே தாக்க ஆரம்பித்து விட்டாயே!... ஆமாம்; உன்னிடத்திலேதான் "பேய் பிசாசு"கள் எல்லாம் இருக்கிறதாமே! அப்படியிருக்க உன்னை யார்தான் திரும்பிப் பார்ப்பார்கள்! உன்னிடத்திலே உள்ள பேய்களைத் துரத்தத்தான் என்னருகிலே கடவுளை எழுப்பி, மாதம் தவறாமல் அந்தக் கடவுளுக்கு ஆடு கோழியெல்லாம் பலி யிடுகிறார்கள்!

புளிய மரம் : அடிமுட்டாள்தனம்! அதை நீயும் நம்புகிறாயா?.........நான் இரவு நேரத்தில் ஆகாரம் தயாரிப்பதில்லையல்லவா?

வேப்ப மரம் : ஆமாம்! சூரிய ஒளி இருந்தாலல்லவா நாம் ஆகாரம் தயாரிக்க முடியும்?

புளிய மரம் : எனவே நம்மைச் சுற்றி கரியமிலவாயு சூழ்ந்திருக்கும். [பகலில் ஒளிச்சேர்க்கை நடக்கும்பொழுது கரியமிலவாயு தாவரங்களால் எடுத்துக் கொள்ளப் படுகிறது] அது தெரியாமல் ஒருவன் குளிர் காலத்தில், அடர்த்தியான என் கிளை மீது படுத்துத் தூங்கிவிட்டான். அவ்வளவுதான்; அதிகாலையில் கீழே இறந்து கிடந்தான்! அதைப் பார்த்த மக்கள், 'கட்டபொம்மன் பேய்' என்னிடத்தில் இருப்பதாக எண்ணிப் பயந்து சாகிறார்கள்!

வேப்ப மரம் : சற்றுமுன் கூறினாயே 'தென்னாட்டவர் புறக்கணிக்கப்பட்டு விட்டார்கள்' என்று! கட்டபொம்மன் சந்ததியில் வந்த இவர்கள் இப்படித் தொடை நடுங்கிகளாக வாழ்ந்தால்... இளிச்சவாயர்களாக....நெஞ்சில் உரமில்லாதவர்களாக இருந்தால்...?

புளிய மரம் : உஸ்! என்ன இது! நம் நாட்டவரை நாமே இழிவாகப் பேசலாமா?...

[அப்பொழுது, "வீரன் கட்டபொம்மன் வாழ்க!" என்ற முழக்கம் எங்கேயோ எழுகிறது!]

வேப்ப மரம் : அதோ பார்த்தாயா?...ஏதோ கூட்டம் வருகிறதே! அடே! கட்டபொம்மன் படத்தை ஊர்வலமாகத் தூக்கி வருகிறார்களே!

புளிய மரம் : அவசரப்பட்டு நம் நாட்டவரைப்பற்றி கண்டபடி வசைமாறி பொழிந்தாயே!... இதோ பார்த்தாயா? அவர்களும் உணர்ச்சிபெற்று எழுந்து விட்டார்கள்! அடுத்த ஆண்டிலிருந்து விடுதலை இயக்கத்தின் பிதா வீரபாண்டியனுக்கு தனியான சிறப்பு விழா கொண்டாடுவார்கள்! ஆனால்...

வேப்ப மரம் : ஆனால் என்ன? திராவிடநாடு கிடைத்தவுடன் தானே கொண்டாட முடியும் என நினைக்கிறாயா? 'ஏகஇந்தியாவிலே' அது இயலாதே எனக் கவலைப்படுகிறாயா?

புளிய மரம் : நீ சொல்வதும் உண்மைதான்! 'ஜனசக்தி' யார்கூட கட்டபொம்மனுக்கு சிலை எழுப்பவில்லையே எனக் கதறியிருக்கிறார்! தலையங்கம் கூடத் தீட்டியிருக்கிறார்! ஏகஇந்தியிலே ஏனிந்த பேதமெனத் தவறிப்போய்சுட்டிக்காட்டியிருக்கிறார்! ஆனால் மக்கள் யாவரும் பகுத்தறிவு பெற்றுவிட்டால், உனக்கு நடக்குமிந்த தடபுடலான பூசைகள்—பலிகள் எல்லாம் நின்றுவிடுமே — என்பதைத்தான் நான் கூற வந்தேன்!

வேப்ப மரம் : (வருத்தத்துடன்)...ஊம்!... அதனால் என்ன?...அப்போது உன் அருகிலே அழகான கட்டபொம்மன் சிலை எழும்பும்! ஏராளமான மக்கள் அதைப் பார்க்கக்கூடுவார்கள்! யார் வந்தாலும் என்னைத் தாண்டித்தானே உன்னிடம் வரவேண்டும்!

[அதற்குள் மக்களின் ஊர்வலம் அங்கே வந்துவிட்டது. அவர்கள் அந்தப் புளியமரத்தின் மீதேறி ஒரு பெரிய கட்டபொம்மன் படத்தைக் கட்டித் தொங்கவிட்டு விட்டு மறைகிறார்கள். புளியமரத்திற்கோ ஒரே மகிழ்ச்சி! கட்டபொம்மன் படத்தைக் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது!]

—"இன்ப புரியான்"

சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா 6—50
ஆறு மாதம் 4—00

வெளி நாடு

ஆண்டு சந்தா 7—50
ஆறு மாதம் 4—50



வெள்ளி 23—8—57 சென்னை

சென்னை ஊழல்!

எதேச்சாதிகாரம் ஆணவத்தின் விளைவு! ஆணவம்—இருக்கின்ற சக்தியைத் தவறாகப் புரிந்து கொள்ளும் அறியாமையின் விளைவு!

—இந்த இரண்டு குணங்களும் இப்போது இந்திய உப கண்டத்துக் காங்கிரஸ் கட்சிக்காரர்களிடத்திலே குடி கொண்டிருப்பது மட்டுமல்ல; பெருகிக் கொண்டும் வருகிறது! கட்சிக் கோட்டையின் புறமதில்கள் சாயச் சாய அவை மட்டும் மேலும் மேலும் பெருகிக் கொண்டே வருகின்றன.

சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று கோரினார்கள், பொது மக்கள்!

உண்மையான காங்கிரஸ்காரர்கள் பலரும்கூட இதன் அவசியத்தை உணர்ந்தார்கள்.

பெரியார் அவர்கள்கூட தேர்தலுக்கு முன்பு நடந்த சென்னைப் பொதுக் கூட்டத்திலே பகிரங்கமாகப் பேசினார்—இந்த முறை காங்கிரசைச் சட்டசபைக்குள்ளே அனுப்பிவையுங்கள்; நான் தமிழ் நாடு எனப் பெயர் வைக்கச் சொல்கிறேன்—என்று!

இருந்தாலும் பெயர் மாற்றம் நடைபெறவில்லை!

ஏன்?

'மெஜாரிட்டி' என்னும் மிருக பலம் நம் கையில் இருக்கிறது. இவர்கள் என்ன செய்ய முடியும்?—என்கிற ஆணவம்தான் காரணம்!

அதுமட்டுமா?

சுதந்திரப் போராட்டத்தின் துவக்கம் என்று கருதப்படுகிற 'சிப்பாய் கலகம்' நடந்த சமயத்தில் டெல்லிப் பீடத்தில் அமர்ந்திருந்த கொடுங்கோலன் வெலிங்டனின் சிலையை அப்புறப்படுத்தினார்கள்.

அந்த இடத்திலே தென்னகத்தின் சுதந்திரச் சுடர் விளக்கு வீரபாண்டியக் கட்டபொம்மன் சிலையை வைப்பதற்கு எவ்வளவு நேரமாகும்?

கேரள அரசாங்கம் அந்த மாநிலத்து விடுதலை வீரன் வேலுத் தம்பியின் திருவுருவத்தைச் சிலையாக வடித்து மாண்டவன் புகழை மீட்கவில்லையா?

அதைப்போல சென்னை அரசும் நடந்து கொண்டால் என்ன?

'எதிர்க் கட்சிகள் சொல்வதை நாம் செய்யலாமா?'—என்கிற ஆணவத்தின் விளைவுதான் கட்டபொம்மனுக்குச் சிலை நிறுவுவதைத் தடுத்து விட்டது!

—இவ்விதம் மாநில அரசிலும், மத்திய அரசிலும் இருந்து வந்து இன்னல் விளைவித்த இந்த ஆணவமும், அதிகாரத் திமிரும் இப்போது நகரசபையிலும் தோன்ற ஆரம்பித்து செத்துக் கொண்டிருக்கும் காங்கிரசிற்குச் சவக்குழி தோண்டி வருகிறது!

—இதற்கு நல்லதொரு உதாரணம்தான் சென்னை நகர சபையிலே சென்ற வாரம் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சியாகும்!

சென்னை நகரசபையினர் சேரிகளின் சீரமைப்புக்காகத் தொகை செலவிட்டு, வேலையிலிறங்கியிருக்கிறார்கள் அல்லவா?

அதைச் சினிமாப் படமெடுத்து; நாட்டு மக்களிடையே காட்டும் விருப்பம் எழுந்தது!

யாருக்கு?

பொதுமக்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டிருக்கிற நகரசபை உறுப்பினர்களுக்கா?

இல்லை; இல்லை! அப்படி இருந்தால்தான் அதை ஜனநாயகத்தின் பாற்பட்ட செய்கை என்று கூறலாமே! அதுவல்ல உண்மை!

"கார்ப்பரேஷனுக்குக் காங்கிரசைத் தேர்ந்தெடுத்து அனுப்பினீர்களே! அது சேரிகளில் செய்துவரும் சீரமைப்பு காணீர்! செங்கரும்பு தின்கிறபோது தோன்றுவதுபோல் சேரிவாழ்வோர் முகத்திலே அரும்பிடும் புன்முறுவலைக் காணீர்!' என்று அந்தத் திரைப் படத்தைத் திரையிட்டு, வரவிருக்கும் நகரசபைத் தேர்தலின்போது பிரச்சாரம் நடத்தி ஓட்டு வேட்டையாடிடும் 'அரிப்பு' தோன்றியதாம் நகராட்சி மன்றத்தின் காங்கிரஸ் தலைவராயிருக்கும் திருவாளர் இராதா கிருட்டிண பிள்ளைக்கு!

அதற்காக அவர்—'காங்கிரஸ் பெரும்பான்மை' என்கிற மது உண்ட மந்திபோல் ஆகி; சென்னை நகரமன்றம் இதுவரை பாடுபட்டு வளர்த்துவந்த ஜனநாயகப் பண்பாடு என்னும் மலர் வனத்திலே புகுந்து நாசம் விளைவித்திருக்கிறார்!

இராதாகிருட்டிண பிள்ளையின் திருவுள்ளம் நினைத்ததாம்; உடனே நகராட்சி மன்றத்து ஆணையாளருக்குக் கடிதம் பறந்ததாம்;—உடனே திரைப்படம் தயாரிக்கச் சொல்லி!

—திரு இராதாகிருட்டிண பிள்ளையவர்களின் சர்வாதிகாரப் போக்கிற்குப் பணிந்து; அல்லது கட்டுப்பட்டு ஓரளவு நடுவுநிலை தவறாமலிருக்க முயற்சி செய்பவர் என்று கருதப்படுகிற மேயர் அவர்கள் கூட இந்த ஒவ்வாத திட்டத்திற்கு எப்படித்தான் ஒப்புதல் அளித்தாரோ தெரியவில்லை!

இராதாகிருட்டிணனார் கடிதம் எழுதினாரே, மேயரின் ஒப்புதலுடன்; அதில் சேரிகளின் சீரமைப்புப்பற்றி திரைப்படம் எடுக்க வேண்டும்; அப்படிப் படம் எடுப்பதற்கு எவ்வளவு செலவாகும் என்பதற்கான 'டெண்டர்'களை வாங்குங்கள்—என்றாவது அறிவித்திருந்தாரா, அவர்?

அதுதான் இல்லை!

ஏதோ மோராக் கம்பெனியாம்! இந்தியாவிலேயே வேறு திரைப் படம் எடுக்கும் கம்பெனி இல்லைபோலிருக்கிறது, இராதா கிருட்டிணனாரின் எண்ணப்படி!

எனவேதான் 'டெண்டர்'கள் எதையும் தருவிக்காமல் அந்தக் கம்பெனிக்கே திரைப் படம் எடுப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள்!

அந்தக் கம்பெனியார் இதரக் கம்பெனிகளைவிட குறைந்த செலவில் எடுக்க ஒப்புக்கொண்டிருந்தாலாவது பரவாயில்லை; காங்கிரஸ் மேலிடத்தாரின் சிக்கனக் கொள்கைப்படி இராதா கிருட்டிணனார் காரியமாற்றுகிறார் என்று நினைத்துக் கைலாகு கொடுத்திருக்கலாம்!

அதுதான் இல்லை!

இதே சென்னை நகரசபையில்; அதன் விசேடக் கட்டிட வேலை இலாக்காவினர் தங்கள் வேலைகளைப் படம் பிடிக்கச் செய்வதற்காக அடி ஒன்றுக்கு ரூ. 3—8—0-க்குமேல் செலவிடவில்லை!

ஆனால் 'சிக்கனச் சிற்பி' இராதா கிருட்டிணனார் சிபார்சு செய்த கம்பெனியாரோ அடி ஒன்றிற்கு ரூ. 13 வீதம் தொகை பெற்றிருக்கின்றனர்!

ரூ. 3—8—0!

ரூ. 13—0—0!

—மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்! கவுன்சிலர் இராதா கிருட்டிணனாருக்கும் இந்திய உப கண்டத்தின் உப தலைவர் இராதா கிருட்டிணனாருக்கும் உள்ள வேறுபாடு!

—இவ்வளவையும் செய்த இராதாகிருட்டிணனாரின் முடிவை—அய்யோ, பாவம்—நிதி வரிக் குழுவின் நிரந்தரக் குழு தோற்கடித்து விட்டது! இனிமேல் இதுபோன்ற எதேச்சாதிகார வேலைகளில் ஈடுபடாதீர் என்று அறிவித்திடும் வகையிலே அவர் கைக்கு விலங்கு பூட்டிவிட்டது!

—நகரசபைக் காங்கிரஸ் தலைவரின் இந்த நாசகாலக் கொள்கையை நாட்டுக்கு அம்பலப்படுத்தி; நம்முடைய பாராட்டையெல்லாம் ஒருங்கே பெற்றிருக்கிறார்கள் தோழர்கள் முனுசாமியும் (தி. மு. க.), ராசமன்னாரும்!

இந்த அக்கிரமச் செயலுக்குப் பலியான நகரசபை ஆணையாளர் "காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேயரும் தவறான வழி காட்டிவிட்டதாக"ப் பேசியிருக்கிறார்.

—பேசுவதால் மட்டும் பயனில்லை; இனிமேல் அவர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

நகரசபைக் காங்கிரஸ் கட்சியைப்பற்றி அவர் கவலைப்பட வேண்டியதில்லை; வரப்போகும் தேர்தலில் பொதுமக்கள் சரியான பாடம் கற்பித்து விடுவார்கள்!

ஏக பாரதப் பித்தர்களே!
★ ஏறெடுத்துப் பாரீர்! ★

அண்மையில் சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் டெல்லி பாராளு மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரலை எதிரொலித்தார்.

"இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர் குடும்பம் ஆதரவற்ற நிலையிலே தத்தளித்துக் கொண்டிருக்கிறது".

—ஆமோதிப்பது போலிருந் தார்கள் ஏக இந்திய வீரர்கள்!

"அந்தமான் நிக்கோபர் தீவுகளிலே மற்ற இந்திய மொழிகள் போதிக்கப்படுவது போலவே தமிழ் மொழியும் போதிக்கப்பட வேண்டும்!"

—எதிர்ப்பில்லை, சபையிலே!

'இந்தியா பல மொழிகள் கொண்ட நாடு மட்டுமல்ல; பல தேசிய இனங்களைக் கொண்ட நாடுமாகும்!"

—இப்போதுதான் இதுவரை அமைதியாக இருந்த சபையிலே "இல்லை! இல்லை!" என்ற கோஷங்கள் கிளம்பிற்றும்! பல இடங்களிலிருந்து கிளம்பிற்றும்! ஏக இந்தியப் பித்தர்கள் அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு முழக்கமிட்டார்களாம்!

பாவம்! அவர்கள் நினைப்பெல்லாம் இந்தியா ஓரே ஒரு நாடு என்பதும், அதில் வாழ்பவர்கள் அனைவரும் 'இந்தியர்கள்' என்கிற தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் — என்பதும் அவர்களுடைய தவறான நினைப்பு!

'தவறான 'நினைப்பு' என்று குறிப்பிடுவதுகூட தவறு. அவர்களுள் பலருக்குத் தெரியும் இந்தியா என்பது ஒரே ஒரு தேசிய இனத்தை மட்டும் உள்ளடக்கியதாக இல்லை— என்கிற உண்மை!

இந்த உண்மையை அவர்கள் தோழர் சம்பத் தனியாகக் கேட்டால்கூட ஒப்புக் கொண்டு விடுவார்கள்.

ஆனால் அதை அம்பலத்தில் ஒப்பமாட்டார்கள்!

ஏன்?

அப்படி ஒப்புக் கொண்டால் 'ஏக பாரதம்' என்கிற ஒரு மத்திய அரசாங்க அமைப்பும், அது வழி செய்திருக்கிற வடநாட்டுச் சுரண்டலும் ஒரு நொடியில் தகர்ந்து பொடிப் பொடியாகிவிடுமே!

—அதனால்தான் தி. மு. கழகத்தின் உயிர் இலட்சியத்தை ஒலி அலைகளாக்கி அவற்றை ஏக பாரதச் செவிப் பறைகளிலே மோதவிட்டபோது 'இல்லை! இல்லை!' — என்று முழக்கமிட்டிருக்கிறார்கள்!

இந்தியா ஒரு நாடு அல்ல; ஒரு தேசிய இனத்தை மட்டும் உள்ளடக்கியதல்ல — என்று நாம்மட்டுமா சொல்கிறோம்?

"நேஷனலிசம்" — என்பது ரவீந்திரநாத் தாகூர் எழுதிய புத்தகம். அவர் குறிப்பிடுகிறார், இப்படி:

"(இந்தியாவுடைய) பிரச்சினை ஒரு சின்ன உலகத்தின் பிரச்சினையாகும். இந்தியா அளவில் பெரியது; பல் வேறுப்பட்ட இனங்களை உடையது, ஒரு பூகோளத் தகைப்பில் பல நாடுகளை ஒன்ருக முடிக்கப்பட்டதுபோல் இருப்பது. ஒரே நாடு பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டு விளங்கும் ஐரோப்பாவிற்கு நேர் முரண்பாடு கொண்டது!"

—தாகூர் எழுதியிருக்கிற 'ஜனகனமண' கீதத்தை ஒப்புக்கொண்டிருக்கிருர்கள், ஆனால் ஏனே மேற்சொன்ன வாசகத்தை ஒப்புக்கொள்ள மறுக்கிருர்கள்!

அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; நிச்சயம் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். திராவிட முன்னேற்றக்கழகம்தான் தனி நாட்டைப் பிரித்து; தாகூருடைய வாசகங்களை நிரூபிக்க வேண்டும்!

★

"சிக்கனம்! சிக்கனம்!!"

—நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம்கூட நாடாள்வோரால் இந்த முழக்கம் எழுப்பப்படுகிறது.

ஆனால் உண்மையில் இந்த வார்த்தைக்குப் பொருள் இருப்பதாகவே புரியவில்லை.

சமீபத்தில் மத்திய சர்க்காரின் அமைச்சர் ஒருவர் காஷ்மீர் என்கிற இடத்திற்குச் சென்றிருந்தாராம்.

எதற்கு?

அதிகாரிகளுக்கு நேரிலே முக்கியமான தகவல் வழங்கவா? அல்லது லஞ்சம், ஊழல் போன்றவற்றின் மூலம் பொது மக்களின் வரிப் பணம் வீணுகாமல் மேற்பார்வையிடுவதற்காகவா?

இல்லை!

பொது மக்களது வரிப்பணத்தைப் பாழாக்குவதற்காகவே மத்தியசர்க்கார் அமைச்சர் ஒருவர் பிரயாணம் நடத்தியிருக்கிருர்.

அதுவும் தனியாகச் சென்ருல் குறைந்த தொகைதான் என்னவோ; தன் 3 ஹோடு கூட பரிவாரங்களுடனேயே சென்றிருக்கிருர்!

எதற்காக?

இராணுவத்தினரின் அணி வகுப்பு மரியாதையைப் பெறுவதற்காக!

எவ்வளவு நேரம்?

பதினைந்து நிமிடங்கள்தான்!

அதற்கான செலவு என்ன?

8,000 ரூபாய்கள்!

பதினைந்து நிமிடங்களில் ஒரு சாதாரண இராணுவ அணிவகுப்பு மரியாதையைப் பெறுவதற்காக; 'சிக்கனம்! சிக்கனம்!' என்று மாரடித்துக்கொள்ளும் மத்திய அரசாங்கத்துக்கு மந்திரி 8,000 ரூபாய்களை வீணடித்திருக்கிருர்!

முன்பு ரோம் நாட்டிலே ஒரு வழக்கம் இருந்தது.

உள்நாட்டிலே அரசாங்கத்திற்கு மதிப்பு குறைந்தால் உடனே மக்களது கவனத்தைத் திருப்புவதற்காக வெளிநாட்டின்மீது போர் தொடுப்பார்களாம்!

போர்! போர்! — என்றே பொதுமக்கள் பேசிக் கொண்டிருப்பார்கள்! அரசாங்கம் இழைத்துவரும் கொடுமைகளையும் குறைகளையும் மறந்து விடுவார்கள்!

இதே முறையைத்தான் இப்போது பாகிஸ்தானும் கடைப்பிடித்து வருகிறது!

ஊழல்களை மறைக்க அவர்கள் திரும்பத் திரும்ப காஷ்மீர் பிரச்சினையைக் கிளப்பி வருகிருர்கள்!

அதே போலத்தான் இந்திய அரசும்!

அரசாங்கத்தின் குறை மலிந்த நிர்வாகத்தைப் பொது மக்கள் மறப்பதற்கு ஒரு தேசிய கோஷம் தேவைப்படுகிறது!

செலவினத்தை எந்தவிதத்திலும் குறைக்காமல் நடத்தப்படும் செலவின கோஷமும் அந்த 'ராஜதந்திர'த்தை அடிப்படையாகக் கொண்டதுதான்!

விற்பனையாகிறது!

இலட்சியக் காவியம்!

மாறன், எம். ஏ. எழுதிய

"ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?"

உங்களிடமும்—மாற்றுக் கட்சித் தோழர்களிடமும் இருக்க வேண்டிய கொள்கை விளக்கக் கையகராதி!

ரூ. 1—8—0

பி. சி. கணேசன், பி. எஸ்ஸி., பி. டி. தீட்டிய

அபிசீனிய அடிமை

விலை ரூ. 1—0—0

தனி புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் அஞ்சல் செலவு அணு 4 சேர்த்து அனுப்பவும்.

முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை ரோடு, திருச்சி—8

பேரழகி பெர்த்தா

பி.சி.கணேசன்
பி.எஸ்ஸி., பி.டி

சென்ற வாரத் தொடர்ச்சி

காண்பது கனவா நினைவா என்பதை கிரேக்கத் தளபதியால் நிர்ணயிக்க முடியவில்லை. சந்தன மேனியும் சரமுல்லைப் பற்களும், பொன்னிறக் கூந்தலும், போதை யூட்டும் நீல விழிகளும் — அந்த அழகின் திரட்சியை இமை கொட்டாமலே பார்த்துக் கொண்டு நின்றான். அவளோ ஆடவன் அங்கிருப்பதைக் கண்டவுடன் நாணத்தால் முகம் கவிழ்ந்தாள். பட்டு முகம் செம்மாதுளை நிறம் பெற்றது. படபடக்கும் விழிகளால் அவனை ஆச்சரியத்துடன் ஒரு முறை பார்த்துவிட்டு, மின்னலென வந்த வழியே மறைந்தாள். கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டான் தளபதி. கனவல்ல—நிஜம் தான்!

அந்த தேவ அணங்கு கண்களிலிருந்து மறைந்தாலும் கருத்திலே தங்கி, நவநவமான உணர்ச்சிகளை ஊட்டிக் கொண்டிருந்தாள்.

"பெர்த்தா ...பெர்த்தா!"—அவன் வாய் முணுமுணுத்தது.

சேவகன் ஒருவன் உள்ளே நுழைந்தான். "அரசர் உங்களை அழைத்து வரச் சொன்னார்!"

"யார்? பெர்த்தாவா?

"...அரசர் அழைக்கிறார் ஐயா! தடாகத்தில் உங்களுக்காகக் காத்திருக்கிறார்!"

"என்ன?"—நினைவு பெற்றான் தளபதி. அவனுக்கே வெட்கமாகப் போய் விட்டது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு டணயாளைப் பின் தொடர்ந்தான்.

வெந்நீர்த் தடாகத்தில் ஷார்லமேன் நீந்திக் கொண்டிருந்தான் "வாரும் தளபதியாரே, குளித்து மகிழும்," என்றான் மன்னன்.

தளபதியும் உடை களைந்து தடாகத்தில் குதித்தான்.

"என்ன தளபதி, பெர்த்தாவின் அழகு எப்படி?'

"பிரமாதம்!"

"கிரேக்க மகுடத்திற்கேற்ற மாணிக்கம்தானா அவள்?"

"கிரேக்க மகுடமென்ன? பெண்ணினத்திற்கு அவள் ஒருத்தி—அழகின் உச்சி! கவிஞனுக்குக் காவியம்! கற்பனைக்கோர் எல்லை! பிரஞ்சு நாட்டின் பெருஞ்செல்வம் உங்கள் பேசும் பொற்சித்திரம்—பெர்த்தா!'

அரசன் பொருள் பொதிய நகைத்தான். தடாகத்தின் சிற்றலைகளிலும் அந்த சேல்விழியாளின் சாயல் கண்டு இன்ப வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தான் தளபதி.

* * *

3

வசந்த நிலவு!

தந்தையின் செயலுக்கு விளக்கம் காண முயன்று கொண்டிருந்தாள் பெர்த்தா. வாலிபன் ஒருவன் அறையில் இருப்பதை அறிவிக்காமலேயே அவளை ஏன் அங்கு அனுப்பவேண்டும்? ஷார்லமேனின் வேடிக்கையான செயல்களில்கூட விசேஷமான பொருள் இருக்கும் என்பதை அவள் அறிவாள். ஆனால் இந்த நிகழ்ச்சிக்கு மட்டும் அவளால் தக்க காரணம் கண்டு பிடிக்க முடியவில்லை. சிந்தனை முடிவு காணாமல் போகவே, மெதுவாகப் பாட ஆரம்பித்தாள். குளுமையான இசை அழகாகக் காற்றில் மிதந்து நிலவொளியில் கலந்தது.

திடீரென்று கதவை யாரோ லேசாகத் தட்டும் ஓசை கேட்டது. பாட்டை நிறுத்திவிட்டு மெதுவாக எழுந்து சென்று கதவைத் திறந்தாள். அச்சமும் ஆச்சரியமும் அவள் உள்ளத்தை நிரப்பின.

"ஏஞ்சில்பர்ட்! அந்தப்புரத்தில், அதுவும் நடுநிசியில்...."—பெர்த்தா அவளையறியாமலேயே வாய்விட்டுப் பேசினாள்.

"மன்னித்து விடு கண்ணே! உன் அந்தப்புரத்தில் இப்படி அகாலவேளையில் நான் வருவது இதுவே முதல் தடவை—இதுவே கடைசித் தடவை என்பதையும் கூறத்தான் இப்பொழுது வந்தேன்!"—ஏஞ்சில்பர்ட்டின் குரல் ஏக்கத்தால் கரகரத்தது!

"என்ன கூறுகிறாய் ஏஞ்சில்பர்ட்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! உன் கரங்கள் ஏன் இப்படி நடுங்குகின்றன? அப்படியென்ன இப்பொழுது குடி முழுகிப் போய்விட்டது?"

"ஆமாம், குடி முழுகித்தான் போய்விட்டது...கதவைச் சாத்து...உன் தந்தை தடாகத்தில் இருக்கிறார். இங்கு வர நாழியாகும்...அதற்குள் எல்லாம் விளக்கமாகச் சொல்லுகிறேன்!'

பெர்த்தா அவன் சொன்னபடி செய்தாள். அவன் கட்டிலில் அமர்ந்தான். அவளும் அவன் அருகில் ஆவலோடு அமர்ந்தாள்.

ஏஞ்சில்பர்ட் சொன்னான்: "நாம் கட்டிய காதல் மாளிகைகள் கனவு மாளிகைகளாகி விட்டன! பேரரசி ஐரீன் அவள் மகன் கான்ஸ்டனடைனுக்குப் பெண் கேட்க தூதுக்குழு ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறாள். கான்ஸ்டன்டைனுக்கு உன்னை மனைவியாக்க உன் தந்தையும் ஒப்பம் அளித்துவிட்டார். நீ இனி எனக்குக் கிட்டாத கனி—எட்டாத தொடுவானம்!"

"என்னைப் பிரிந்து வாழ அப்பா ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார்!"

"அரசரைப்பற்றி நீ எண்ணுவது தவறு பெர்த்தா! நாட்டின் நலன் கருதி தன் அன்பைத் தியாகம் செய்ய அவர் ஒரு நாளும் தயங்க மாட்டார். உனக்குத் திருமணம் செய்ய முடிவு செய்து விட்டார் என்பதில் சந்தேகமேயில்லை!"

"ஐயோ, அதிகார ஆசையால் கொண்டவனையே கொலைத் துணிந்த ஐரீனுக்கு மருமகளாக நான் சம்மதிப்பதா? அதிலும் ஏஞ்சில்பர்ட், உன்னை மறந்து, பிள்ளைப் பருவத்திலிருந்து நாம் பேணிவளர்த்த காதலை மறந்து, அரசியல் காரணங்களுக்காக அன்னியன் ஒருவனுக்கு நான் மாலை யிடுவதா? ஒருக்காலும் முடியாது ஏஞ்சில்பர்ட்!"—கண்களில் கண்ணீர் முத்துமாலை மாலையாகச் சொரிய ஏஞ்சில்பர்ட்டைக் கட்டித் தழுவிக் கொண்டாள் பெர்த்தா!

அவளை இறுக அணைத்தபடியே அவளுடைய பொன்னிறக் கூந்தலை அன்புடன் ஏஞ்சில்பர்ட் கோதினான். ஆறாத் துயரிலும் அவனுடைய ஆலிங்கனத்தில் சிறிது ஆறுதல் பெற்றாள் பெர்த்தா!

"ஏஞ்சில்பர்ட்!"

"கண்ணே பெர்த்தா......"

"கர்த்தருக்கு நம்மீது இரக்கம் இருக்காது என்று எண்ணுகிறாயா ஏஞ்சில்பர்ட்!"

"கர்த்தருக்கு மட்டும் இரக்கம் இருந்தால், போதாது கண்ணே...காவலனுடைய உள்ளமும் இளக வேண்டுமே!"

"நம் காதல் கனவுதானா, அன்பே?"

✱ 8-ம் பக்கம் பார்க்க

சட்ட சபையில் நமது சாதனை!

"தி. மு. கழகத்தின் சட்ட சபைக்குச் சென்று என்ன சாதித்து விட்டார்கள் என்று சிலர் கேட்கிறார்கள். சட்ட சபைக்குச் செல்வது என்றால் அமைச்சர்களோடு சண்டை போடுவதல்ல; புத்தகங்களையும் நாற்காலிகளையும் வீசி எறிவதல்ல!

1957-ம் ஆண்டில் சட்டசபையில் புகுந்த தி. மு. கழகத்தினர் 1967-ம் ஆண்டிற்குள் தங்களது குறிக்கோளைப் பெறுவதில் தோல்வியடைந்து விட்டார்களானால் ஆப்பிரிக்க நாட்டு சிவப்பு இந்தியர்கள் அடைந்த கேவல நிலையைத்தான் தமிழர்களும் அடைய நேரிடும் என்று எச்சரிக்கிறேன்.

சட்ட சபைக்கு தி. மு. கழகத்தினர் சென்ற சில மாதங்களுக்குள்ளேயே மாகாண அமைச்சர்கள் பலரிடம் டெல்லி அமைச்சர்கள் ஐயம் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். தமிழ் நாட்டு வரலாற்றிலேயே ஒரு புது யுகத்தை தி. மு. கழகம் ஏற்படுத்தியிருக்கிறது."

—அறிஞர் அண்ணா

நீட்டோலை

மு. கருணாநிதி

னுக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டுவிட்டு என் குடும்பக் கொடிகளுக்கு அன்புத் தண்ணீர் வார்த்து வளர்த்து வா! அப்பன்தான் சுகப்படவில்லை; அனுதினமும் அழுத கண்ணோடு வாழ்க்கை நடத்தினான்; அவன் மக்களாவது நல்வாழ்வு — நிம்மதியான வாழ்வு பெறட்டும் என்று நீ வருங் காலத்தில் திருப்தி அடைவாய் அல்லவா? அதற்கான வழியிலே என் பிள்ளைக் கனிமுதுகளைப் பார்த்துக் கொள்! வருகிறேனடா கண்ணே! கதிர் வளர்த்த கழனியில் கண்ணீர் ஊற்றப் போகிறேன்!"

* * *

"மகனே! உன் தாய் அறுபது வயதுக்குமேல் உயிர் வாழ வேண்டும்; முப்பதும் நிரம்பாத நீ, முடி நடும் வயலிலே தலை நடப் போக வேண்டுமா? இந்தக் கிழ இருதயத்திலும் உணர்ச்சி இருக்கிறது! பலநாள் பட்டினி கிடந்து சாவதைவிட ஒரு நாளில் செத்துத் தொலையலாமே—இரு; இரு; இதோ நானும் வருகிறேன்!"

* * *

தாய் மகனிடம் பேசுகிறாள். தனயன் தம்பியிடம் குழந்தைகளை ஒப்படைக்கிறான். தாரம் போர்க்கோலம் பூண்டதைக் கணவன் தடுத்துத் தோல்வியடைகிறான்.

தாயும் மகனும் தாரமும் போடத் துவங்குகிறான் வியர்வைச் சிந்தியவன், ரத்தம் சிந்தவும் தயாராகிறான். நல்லதொரு காரியத்திற்காகத் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொள்ள முடிவு கட்டிப் புறப்படுகிறான்.

நங்கவரம் அறப்போர் பற்றித்தான் பொன்முடி; குறிப்பிடுகிறேன். இந்த மடல் உன் கையிலே கிடைப்பதற்குள் நிலைமை என்னவோ—யார் கண்டது? மடல் காண்பதற்கு முன்பே ஒருவேளை நீ நங்கவரம் வந்திடவும் கூடும். எதற்கும் எழுதுவோமே யென்றுதான் எழுதயிருக்கிறேன்.

சென்ற கிழமை முதலமைச்சர் காமராசர் அவர்கள் குளித்தலை வட்டாரத்திற்குச் சென்று

ஏழை உழவன் - எழுந்து விட்டான்!

அன்புள்ள பொன்முடி!

"தம்பி! குழந்தைகளைப் பார்த்துக் கொள்! உன்னை நம்பித்தான் என் அருமைச் செல்வங்களை விட்டுச் செல்கிறேன். போகிற நான் திரும்பி வருவேன் என்ற நிச்சயமில்லை. நடப்பது "நம்ம சர்க்கார்" தான்! ஆனால் நம் உயிருக்குத்தானே எந்த நேரத்திலும் ஆபத்து! உரிமையை நிலைநாட்டிக் கொள்ள எனக்கிருக்கிற ஒரே வழி—பல வழிகளில் முயன்றும் பலனின்றிப் போகவே கடைசியாக உள்ள ஒரே வழி அறப் போரில் ஈடுபடுவதுதான்! வெந்த உள்ளத்தோடு வேதனை புரியில் நடமாடிக்கொண்டிருப்பதைவிட; போர் முனையில் உயிர் விடுவது எவ்வளவோ மேலப்பா இன்றுள்ள சூழ்நிலையில்! போலீசாரும், அதிகாரிகளும் துப்பாக்கி முனைகளும் சூழ்ந்திருக்க, நடுவே புகுந்து நமது உரிமைப் போர்க் கொடியை உயர்த்தப் போகிறேன். துப்பாக்கி ரவைகள் உறங்கிக்கொண்டா இருக்கும்? அறப்போர்; அமைதியான போர்—ஈடுபடுகிறவர்களோ எந்தவித அசம்பாவிதங்களுக்கும் இடங்கொடுக்காத கண்யத்தைக் கடைப்பிடிக்கும் கழகத்தின் சார்புடையவர்கள் என்றெல்லாம் எண்ணிப் பார்க்கவும் நேரமிருக்காது: ஏறு நடைபோடுகின்ற அதிகாரிகளுக்கு! ஆகவே, கண்ணீர்ப்புகை-துப்பாக்கிப் பிரயோகம் வரையிலே அகிம்சா சர்க்காரில் எதிர்பார்க்கலாம். அதிலே ஒரு ரவை என் மார்பைத் துளைத்து விடலாம். இத்தனை நாளும் நான் வியர்வை கொட்டிய வயலில் கடைசியாக ரத்தம் கொட்டிட நேரிடலாம். அதனால்தான் தம்பீ; என் அன்பு மழலைகளை உன்னிடம் ஒப்படைத்து விடைபெறுகிறேன். வந்தால் வரவில் வைத்துக் கொள்! வராவிட்டால் கவலைப்படாதே! கடமையாற்றச் சென்ற அண்ண

"அன்புள்ளவளே! நீயும் என்னுடன் புறப்படுகிறாயே; நியாயமா இது? அதிகார வர்க்கத்தின் ஆவேசம் ஆண் பெண் என்று கூடப் பார்க்காதே! உன்னையும் கொடுமைப்படுத்துவார்களே! வேண்டாம். நீ வீட்டிலேயே இரு' வெற்றியுடன் திரும்பி வருகிறேன்!"

* * *

புறப்படுகிறார்கள். தம்பியும் வந்து விடுகிறான். தளிர்களாம் குழந்தைகளும் தொடர்கின்றன. நியாயம் வழங்காதவர்களின் கையால் கூண்டோடு சாவோமே என்ற உறுதி பாதிக்கப்பட்ட அனைவரது உள்ளத்திலும் எழுந்துவிட்டது.

ஆகஸ்டு 23-ம் நாள் பாட்டாளி மகன் பட்டாள நடை

நங்கவரம் அக்ரமம்!

நாட்டினரே! காணீர்! நியாயம் தார வாரீர்!

2,000

உழவர் குடும்ப உரிமை பறித்து

வயிற்றில் அடிக்கிறார் பண்ணையார்!

23 - 8 - '57

உழவர்கள் உரிமைபெற அறப்போர்!

இதயமுள்ளோரே! துணை நிற்பீர்!

-விவசாயிகள் முன்னேற்ற சங்கம், குளித்தலை வட்டம்

தும், பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றியதும் பத்திரிகைச் செய்திகள்!

குளித்தலையில் நங்கவரம் அறப்போர் பற்றி முதலமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். நங்கவரம் அறப்போர் எதற்காக நடக்கிறது என்பதற்கு அவர் கொடுத்திருக்கிற விளக்கமிருக்கிறதே; மிக சிலாக்கியமானது! பாராட்டப்பட வேண்டிய பொன்மொழிகள்! நமது முதலமைச்சரைத் தவிர, வேறு யாரும் அத்தகைய முத்துக்களைச் சிந்த முடியாது! வாயைத் திறப்பதில்லை; திறந்தாலோ வாடை சகிப்பதில்லை — என்ற அளவிலேதான் திருவாய் மலர்ந்தருளுகிறார் விருதுநகர் பெம்மான்!

"நங்கவரம் போராட்டம்-கருணாநிதி பெரியவரா; கல்யாணசுந்தரம் பெரியவரா — என்பதற்காக நடத்தப்படுகிற பலப் பரீட்சை!"

காமராசரின் கண்டு பிடிப்பு இஃது! விவசாயிகள் படும் வேதனையை மூன்று முறை அமைச்சரைப் பேட்டி கண்டு விளக்கியாகி விட்டது. எந்தெந்த வழிகளில் சமாதானத்திற்காக முயற்சிக்கலாமோ அந்த வழிகளில் எல்லாம் முயற்சித்துப் பார்த்தாகி விட்டது. சட்டத்திலே ஓட்டையிருக்கிறதென அமைசசர்களே சபை நடுவே ஒத்துக் கொள்கிறார்கள். அந்த ஓட்டையை நிலப் பிரபுக்கள் பயன்படுத்திக் கொண்டு தவறான வழியில் செல்வதற்கு அனுமதிக்க மாட்டோம், என்றும மந்திரிமார்கள் மார் தட்டுகிறார்கள். இவ்வளவும் கூறிவிட்டு போராட்டம் அவசியமில்லை என்கிறார்கள்.

விவசாயி நிலத்தில் இறங்கக் கூடாது! கூலியென அடிமைச் சீட்டு எழுதித்தர வேண்டும்! இல்லையேல் அவனுக்கு நிலத்தில் வேலையில்லை! வெளியே

வேண்டும் என்று கூறப்பட்டு, கருங்காலிகளைக் கொண்டு கழனியிலே உழுது, விதைதெளித்து, பயிர் வளர்ப்பதற்கான சகல வேலைகளும் நடைபெறுகிற போதும் கூறுகிறார் அமைச்சர், பொறுமை-பொறுமை என்று!

பயிரிடும் நேரமல்ல; விவசாயக் காலத்திற்கு இன்னும் அதிக நாள் இருக்கிறது—அதற்குள் போராட்டம் தேவையில்லையென்றால் அதிலாவது பொருள் இருக்கக் கூடும்!

இதுவோ; பட்டினிக் கிடந்து சாகிறவனைப் பார்த்து பத்து நாள் பொறுத்துக்கொள்; பருப்புப் பொங்கல் ஆக்கித் தருகிறேன் — என்று கூறுவது போலன்றோ இருக்கிறது!

யார் பெரியவர் என்பதற்காக இந்தப் போராட்டமாம்! இந்தக் காரணத்தை ஒரு மந்திரி வெளியிட்ட பிறகு, மக்களின் தீர்ப்பு எதுவாயிருக்குமென நீ எண்ணுகிறாய்? கருணாநிதி பெரியவரோ—கல்யாண சுந்தரம் பெரியவரோ; அதுபற்றிக் கவலையில்லை—ஆனால் ஒன்று நிச்சயம்—பிரச்சினையின் அவசரத்தையும் அவசியத்தையும் உணராமல் இதுபோலப் பேசிக்கொண்டிருப்பவர்கள் நிச்சயம் பெரியவர்களாயிருக்க முடியாது.

"மிராசுதாரர்கள் பிடிவாதக்காரர்கள் என்று எனக்குத் தெரியும். சட்டத்திலுள்ள பொத்தல்களை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு கிஸான்களுக்கு அதிருப்தி ஏற்படுத்தும் வகையில் சில காரியங்களைச்செய்கின்றனர். சாகுபடியையே நம்பி வாழும் கிஸான்களுக்கு இவர்களது செய்கைகள் எரிச்சலை ஏற்படுத்தி உள்ளன!"

—காமராசர் குளித்தலையில் பேசியதுதான் மேலே உள்ள வாசகங்களும்!

நிலப் பிரபுக்களின் செய்கையால்தான் விவசாயி ஆத்திரமடைகிறான்—என்று கூறுகிற அளவுக்கு உண்மையின் விளிம்புவரையில் வந்து விட்ட முதலமைச்சர், திடீரென வழுக்கி, அதிகாரச் சேற்றில் விழுந்து "இருந்தாலும் போராட்டம் நடத்தினால ஒரு கை பாரப்போம்" என்றும் அறைகூவல் விட்டிருக்கிறார்.

அமைச்சர்தான் பொன்முடி அப்படிப் பேசுகிறார். ஒரு கை பார்ப்பாராம்; வா போருக்கு—என தோள் தட்டுகிறார்.

அவர் மந்திரி! அவரிடம் சேனை உண்டு! துப்பாக்கி வரிசை உண்டு! அவரது மொழிப்படி எரிச்சல் கொண்ட ஏழை தன் காய்ப்பேறிய கையைப் பார்த்துக் கொண்டு வயலில் இறங்குவான்!

'ஒருகை பார்ப்போம்' என்ற காமராசரின் படை வரிசையும் அடக்கு முறையில் இறங்கும்!

"ஒரு கண் பாரும் எம்மை" என விவசாயி அழுதான்!

அவரோ; ஒரு கை பார்க்கிறேன் என்று அதட்டுகிறார்!

மந்திரி பேசுகிறார் கண்டபனே, இவ்விதம்!

"மிராசுதாரர்கள் சட்டத்தின் பொத்தலில் நுழைகிறாகள்!'

"அவர்களது செயல் விவசாயிக்கு எரிச்சல் மூட்டுகிறது!'

எரிச்சலை அடக்குவதற்கு அமைச்சர் வழி காணவும் மறுக்கிறார்.

பிள்ளைகுட்டிக்காரர்கள் விவசாயத் தொழிலும் இல்லாமல் எப்படி வயிறு கழுவிடுவார்கள் என்ற கவலை காமராசருக்குப் பிறக்கவில்லை!

வடாற்காடு மாவட்ட
தி. மு. கழக மூன்றாவது
அரசியல் மாநாடு!
செப்டம்பர் 21, 22-தேதிகளில்
திருவண்ணாமலையில் நடைபெறும்.

தலைவர் :
அன்பில் தர்மலிங்கம்
திறப்பாளர் :
கிருட்டிணமூர்த்தி பி. ஏ. (ஆனர்ஸ்)
அறிஞர் அண்ணா,
பொதுச் செயலாளர்
நாவலர் நெடுஞ்செழியன்—மற்றும்
இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும்
கலந்து கொள்கிறார்கள்.
*
இரண்டு நாட்களிலும் கருத்து
விருந்தளிக்கும் நாடகங்கள் உண்டு!
—முல்லை சத்தி
(வரவேற்புக் குழுத் தலைவர்)
செயலாளர்கள் :
ப. உ. சண்முகம், எம்.எல். ஏ.
ம. பா. சாரதி, எம். எல். ஏ,
பொருளாளர் :
முருகையன்
விளம்பர உறுப்பினர்
கருத்தோவியன்

எதிர் காலம்...?

"டில்லிப் பட்டணத்திலே 2,000 தெருக் கூட்டும் தொழிலாளர்கள் 'சம்பளம் போதவில்லை' என்று கிளர்ச்சி செய்தார்கள், பாராளுமன்றத்தின் காதுகளிலும் விழ வேண்டுமென்று 200 தொழிலாளர்கள் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு முன்னால் நின்று கிளர்ச்சி செய்தார்கள். வேலை நிறுத்தம் செய்ததால் கூட்டுக்கோல்கூட அவர்களிடம் இல்லை. வெறுங் கையுடன் பார்லிமெண்டு நோக்கிச் சென்ற அவர்களை சமாதான முறையில் திருப்பி அனுப்பியிருக்க முடியாதா, நேரு சர்க்கார்?

ஜிம்கானா மைதானத்தில் இலட்சக் கணக்கான மக்களைச் சந்திக்கும்போது வருகிற சந்தோஷம் 2,000 கூட்டுத் தொழிலாளரை சந்திக்கிறபோது ஏற்படவில்லை அவருக்கு! அதற்குத் துப்பாக்கிக் குண்டுதான் பரிசா? அந்த தொழிலாளி மக்கள்மீது போலீசார் சுட்டனர். ஒருவர் செத்தார்; மற்றொருவர் சாகுந் தருவாயிலிருக்கிறார்!

டால்மியாபுரம் என்ற பெயரைக் 'கல்லக்குடி' என்று மாற்றச் சொன்னோம். இப்படி மாற்றுவதில் என்ன சிரமம் இருக்கிறது? தார்கொண்டு அழித்து எழுத ஆறணா செலவுதான் அதற்குப் பிடிக்கும். இதற்காக மூன்று பேர் செத்தார்கள்!

இப்படி உரிமைக்காகப் போராடுகிறவர்களை சாக்காட்டுக்கு அனுப்பி வரும் காங்கிரஸ் ஆட்சிபீடத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை, எண்ணற்ற யதேச்சாதிகாரங்கள் சரிந்தொழிந்துபோன சரித்திர உண்மைகள் நமக்கும் நாட்டுக்கும் அறிவிக்காமலில்லை!

—மயிலையில் அறிஞர் அண்ணா.

காங்கிரஸ் அமைச்சர்களுக்கே அந்தக் கவலை பிறக்காது!

அதிலும் பிள்ளை குட்டி கஷ்டம் தெரியாத பிரம்மச்சாரிக்கு எப்படி கவலை பிறக்கும்?

அதனால்தான் அவர், தாழ்த்தப்பட்டோர் யாரும் உறுப்பினரில்லாத தாழ்த்தப்பட்டோர் லீக்கின் சார்பில் அறப்போர் வீரர்களைப் பயமுறுத்தி விட்டுப் போயிருக்கிறார்!

"தாழ்த்தப்பட்டோர் லீக்" குளித்தலையில் காமராசர் வருகைக்காகவே படைக்கப்பட்ட "ரிஷிப் பிண்டம்"! அது அரசியல் 'ஸ்டண்ட்'டாகத் தெரியவில்லை காமராசருக்கு! தி. மு. கழகத்தின் போராட்டங்கள் தான் அவருக்கு 'ஸ்டண்ட்'டாகத் தெரிகிறது.

வேலை செய்ய மனமிருந்தும், நிலமிருந்தும், வேலி போட்டுத் தடுக்கின்ற பண்ணையாரின் அக்ரமத்தால் விவசாயி நொந்து கிடக்கும் நிலையைக் கண்ணிருந்தும் காண மறுக்கிறார் காமராசர்!

எவ்வளவோ விட்டுக் கொடுத்து சமாதானம் பேசியும் பண்ணையார் இறங்கவில்லை! அதனால் இறங்கி விட்டான் ஏழை உழவன், அறப்போரில்!

ஏர் கலப்பை தோள்மீது
போர்முழக்கம் தெருவெல்லாம்!
புறப்பட்டு விட்டான் விவசாயி!
இருவண்ணக் கொடி தன்னில் இருள் அகற்றும் செங்கதிரைப் பதித்துக்கொண்டு உழவர் கொடி உருவாக்கிவிட்டாள், உரிமைப் பெண்ணாள்!

கேட்டது வாழ்வு —
கிடைப்பது சாவு!—எனில் மகிழ்வோடு வரவேற்போம் என முழங்குகின்றான் பாட்டாளி குல மூதாதை!

அணு அணுவாய்ச் சாவதினும் ஆயிரம் பேர் கூட்டாக மடிவோம் என்று அணிவகுத்து எழுந்து விட்டார் நங்கவரம் உழவரெல்லாம்!

நாடெங்கும் உதவி தர நமது தோழரெல்லாம் கிளம்பி விட்டார்!...

உரிமைப் போர்!
உண்மைப் போர்!
உழவர் பெருமக்கள் நடத்துகின்ற அறப்போர்!

இறுதிவெற்றி எமக்கென்றே முரசறைவோம்! 'வா!' வா! உடனே வா நங்கவரம்!...

அன்புள்ள,
நண்பன்.

பேரழகி பெர்த்தா ...

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

அவன் பதில் பேசவில்லை. பெருமூச்சுவிட்டான். வெளியே நிலவு எரித்துக் கொண்டிருந்தது. அரண்மனை நந்தவனம் நிலவுத் தேவதையின் கரம்பட்டு புதுப்பொலிவு பெற்றிருந்தது. இரவாகியும் காதலன் வராமையால் குயில் ஒன்று "குக்கூ...குக்கூ" என்று கூவிக் கொண்டிருந்தது.

பெர்த்தா ஏஞ்சில்பர்ட்டின் மடியில் மலர் மாலைபோல் துவண்டு கிடந்தாள்.

அவள் மெதுவாக எழுந்தாள். அவள் இடுப்பைக் கரத்தால் அணைத்தபடியே அவளை முற்றத்துக்கு அழைத்து வந்தான். நிலவு, அந்தக் காதல் உள்ளங்களுக்குப் போதையூட்டிக் கொண்டிருந்தது. இருவரும் மெதுவாகப் படிகளில் இறங்கி மலர்வனத்திற்குள் புகுந்தனர். மர நிழலில் விரிந்து கிடந்த புல்வெளியே அவர்களுடைய மஞ்சமாயிற்று. காலவெள்ளம் அடித்துச் செல்லு முன்பே காதல் வெள்ளத்தில் மூழ்கித் திளைக்க காதலரிருவரும் எண்ணினர் போலும்.

காலம் கடுகிச் சென்று கொண்டிருந்தது. இட்டும், தொட்டும்—உண்டும் உயிர்த்தும் காலதேவனை மதியாமலேயே காதலர் மயங்கிக் கிடந்தனர்.

°° °° °°

4

நீர் விளையாட்டு முடிந்தது. ஷார்லமேனும் கிரேக்கத் தளபதியும் விருந்துண்டனர். விருந்து முடிந்தவுடன் வழக்கம்போல் ஷார்லமேன் சிறிது நேரம் மன்றம்கூட்டி அரசியல் அலுவல்களைக் கவனித்தான். இரவு நேரங்களில் மன்றங்களில் அமர்ந்து அரசியல் விவகாரங்களைக் கவனிப்பது ஷார்லமேனின் வாடிக்கை. கிரேக்கத் தளபதியும், அரசனுடனேயே இருந்து அரசனின் ராஜ்ப் பரிபாலனத்தைக் கவனித்தான்.

பிறகு இருவரும் சிறிதுநேரம் நிலவொளியில் உலாவப் புறப்பட்டனர்.

"தளபதி, பெர்த்தாவின் அழகை அறிய ஆவலாக இருந்து நேரிலேயே பார்த்துத் தெரிந்து கொண்டீர். ஆனால் உங்கள் இளவரசர் கான்ஸ்டன்டைனைபற்றி நீர் ஒன்றுமே சொல்லவில்லையே," என்றான் ஷார்லமேன்.

"கான்ஸ்டன்டைன்" என்று கூறிப் புன்முறுவல் பூத்தான் தளபதி "எங்கள் இளவரசர் கண்ணியமானவர்; நேர்மையானவர்; நல்லவர்; நாடாளத் தெரிந்தவர்! உங்கள் மகள் பேரழகி பெர்த்தாவை மனைவியாக வைத்து இல்லறம் நடத்தப் போதுமான எல்லாத் தகுதியும் அவரிடம் உண்டு!'

"அப்பாடா!... இப்பொழுது தான் நிம்மதி! பெர்த்தாவின் அழகைப் பார்க்கும் போதெல்லாம் பெருமிதமும் கவலையும் என் மனத்தில் ஒருங்கே தோன்றும். இவ்வளவு பெரிய அழகைப் படைத்து புவிக்களித்த கர்த்தர், அதை மணக்க நல்ல வீரத்தையும் அனுபவத்தில் படைத்திருக்க வேண்டுமே என்று...! கர்த்தரின் அருள் தான் கான்ஸ்டன்டைனை அனுப்பி வைத்துள்ளது...... யாரறிவார் அவர் திருவிளையாடல்களை......"—ஏதோ உலகைப் படைத்த ஆண்டவன் பெர்த்தாவிற்காகவே படைத்திருப்பதைப்போல எண்ணிப் பேசினான் ஷார்லமேன்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டே செல்லும்பொழுது, அந்த நிசி வேளையிலேகூட மலர் வனத்தில் எங்கோ இருவர் பேசிக்கொள்ளும் குரல் கேட்டுத் திகைத்தனர். மெதுவாகப் பேச்சு வரும் திக்கைநோக்கி கவனித்தனர். பேச்சும், அதைத் தொடர்ந்து கலகலவெனச் சிரிப்பொலியும் கேட்டது. ஷார்லமேன் ஓசை வந்த இடம் நோக்கி விரைந்தான்.

வேற்று மனிதர் அரவம் கேட்கவே விரைந்து எழுந்தனர் காதலர்!

"துரோகி! உண்ட வீட்டிற்கு ரண்டகம் செய்த சண்டாளா! கள்ளமறியா என் கன்னிப் பெண்ணின் கற்பை என் அரண்மனை எல்லையிலேயே சூறையாடத் துணிந்த தூர்த்தனே! ...இந்தா; பெற்றுக்கொள்..." என்று வாளை உருவிப் பாய்ந்தான் ஷார்லமேன்.

வாளுக்கும் காதலனுக்கும் இடையே விழுந்து, காதலுக்கு இடையூறு நேராமல் கவசமானாள் பெர்த்தா. வாள்வீச்சு செயல்படாமல் தடுத்து நிறுத்தினான் கிரேக்கத் தளபதி.

"அப்பா, எனக்கும் ஏஞ்சில்பர்ட்டிற்கு மிடையே காதல் முகிழ்த்தது இன்றல்ல; நேற்றல்ல! சிறுவர்களாயிருந்த பொழுது சேர்ந்து விளையாடினோம். கள்ளமற்ற இரு உள்ளங்களில் அன்று ஊன்றப்பட்ட வித்து, காலதேவனின் கரம்பட்டுக் கனியாகப் பழுத்துவிட்டது. அப்பா, உங்கள் கொல்லையில், உங்கள் மண்ணில் தோன்றிய அக்கனியை வேற்று நாட்டு வெளவால்கள் கடித்து நாசப்படுத்துவதில் என்ன திருப்தியப்பா காணப் போகிறீர்கள்....?"—பேரழகி பெர்த்தா காதல் துயரில் கவியாகி உள்ளம் நெக்குருக உணர்ச்சியுரையாற்றினாள். ஷார்லமேன் சிந்தாத கண்ணீரைச் சிந்தியழும் மகளுக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியாமல் திகைத்து நின்றான்.

கான்ஸ்டன்டைனுக்காகத் தூது வந்திருக்கும் தளபதியைப் பார்த்தாள் பெர்த்தா. அவள் கண்கள் அவனைப் பிச்சை கேட்டன. தளபதி பேசினான்:

"பேரழகி பெர்த்தா! உள்ளத்தை மற்றொருவனுக்கு ஒப்படைத்துவிட்ட ஒரு பெண்ணின் உடலைத் தீண்டி மகிழ நினைக்கும் காமுகனல்ல எங்கள் கான்ஸ்டன்டைன்! பெர்த்தாவின் பேரழகு வாழ்க்கைக்கு வழி காட்டும் தீபமாக வேண்டுமென அவர் எண்ணியது உண்மை......ஆனால், எங்கள் இளவரசர் துரதிர்ஷ்டசாலி... என் தூது முடிந்துவிட்டது... வருகிறேன் வேந்தே! போய்வருகிறேன் பெர்த்தா...!"—கிரேக்கத் தளபதி அரசனை வணங்கிய பின், மெதுவாக பெர்த்தாவின் கரங்களை உயர்த்தி அவைகளில் முத்தமிட்டான்.

நிலவின் ஒளியில் அவன் கடைக் கண்களில் தேங்கி நின்ற நீர் முத்துபோல் ஒளி விட்டது. சிறிது நேரத்தில் அங்கிருந்து மறைந்தான்!

அரசன் ஷார்லமேன் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பிறகு திடீரென்று உணர்ச்சிமிக்கவனாய் பெர்த்தாவின் கரத்தை ஏஞ்சில்பர்ட்டின் கரத்தோடு இணைத்து வாழ்த்துக் கூறினான்.

★

மறுநாள் பொழுது புலருமுன்பே கிரேக்கத் தளபதி பரிவாரங்களோடு புறப்பட்டுப் போய்விட்டான். ஆனால் செல்லும்பொழுது பெர்த்தாவின் காதலன் ஏஞ்சில்பர்ட்டிற்கு வீரவாள் ஒன்றைப் பரிசாக விட்டுச் சென்றிருந்தான். அந்த வாளின் கைப்பிடியில் கீழ்க்கண்ட வரிகள் பொறிக்கப்பட்டிருந்தன:

"அதிர்ஷ்டசாலியான ஏஞ்சில்பர்ட்டிற்கு அவர் நண்பன் கிரேக்க இளவரசன் கான்ஸ்டன்டைனின் அன்பளிப்பு!"

இந்த வெகுமதியும் அதில் பொறிக்கப்பட்டிருந்த வாசகமும் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தின. ஆனால் அரசன் ஷார்லமேன் மட்டும் ஆச்சரியப்படவில்லை. கிரேக்கத் தளபதியாக வந்தது இளவரசன் கான்ஸ்டன்டைன்தான் என்ற உண்மையை ஆரம்பத்திலிருந்தே அறிந்தவன் அல்லவா அவன்!

(முற்றும்)

உதற முடியுமா, உயிரோட்ட இலட்சியத்தை!

"தி. மு. கழகம் கேட்கும் திராவிடநாடு பிரிவினைக் கொள்கைக்கும் மண்டலக் குழு அமைப்புக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு அதிகமிருக்கிறது.

திராவிடநாடு என்பது, நாம் வீட்டில் சாப்பிடும் சுட்ட இட்டிலி போன்றது. மண்டலக் குழு சிறு குழந்தைகள் மண்ணைக் குழைத்து வைத்து இட்டிலி சுட்டு விளையாடுவார்களே, அதைப் போன்றது!

மண்டலக் குழுவை மத்திய அரசாங்கம்தான் அமைத்திருக்கிறது; அக்குழுவுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது; எந்தக் கருத்தையும் மத்திய அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்யலாம். ஆனால் தி. மு. கழகம் கேட்கும் திராவிடநாடு அமைப்புக்குத் தனி அதிகாரங்கள் இருக்க வேண்டும். டெல்லியில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். மண்டலக் குழுவில் உள்ள இதர மாகாண அமைச்சர்கள் அனைவரும் இதை வற்புறுத்துகிறார்கள்; ஆனால் சென்னை மாகாண அமைச்சர்கள் டெல்லிக்குள்ள அதிகாரத்தைப் பற்றிப் பேசுவதே கிடையாது.

சட்டசபையில் தி. மு. கழகம் புகுந்து சில மாதங்களே ஆகின்றன; அங்கு எங்களுக்குக் கணிசமான ஆதரவும் வலுவும் கிடைத்த பின்னர் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தப்போகிறோம்.

திராவிடநாடு என்பது தி. மு கழகத்தின் உயிரோட்டமுள்ள பிரச்சினையாகும். அந்த அடிப்படைக் கருத்திலிருந்து ஒருக்காலும் தி. மு. கழகம் பின்வாங்கப் போவதில்லை.

டில்லிக்கு அருகாமையிலுள்ள இமயமலையைக் காட்டி, 'அது வரையிலும் பாரதம் விரிந்து கிடக்கிறது' என்பது தேசீய உணர்ச்சி என்றால், தமிழர்களின் கண்களுக்கு அருகாமையிலுள்ள விந்தியத்தைக் காட்டி, 'அதுவரை தமிழகத்தின் எல்லைகள் உண்டு' என்று கூறுவது எவ்வாறு தேசீய உணர்ச்சிகளுக்கு மாறுபட்ட கருத்தாகும்?

தொழில் துறையிலும், அரசியல் துறையிலும், மொழித் துறையிலும் பரந்த அனுபவமுள்ள பெரியார்களின் நல்லுரைகளை வரவேற்கத் தி. மு. கழகம் தயாராக இருக்கிறது."

—மதுரையில் அறிஞர் அண்ணா

ஒரு 'ஓட்டு' வித்யாசம் - அய்யோ; அந்த மொழித் துரோகி யாரோ?

"இந்தியை எந்த மாநிலத்தின் மீதும் கட்டாயமாகத் திணிக்கமாட்டோம்"

—இப்படி அதிகார பீடத்திலிருந்து கூக்குரல் கிளம்பிக் கொண்டிருக்கும்போதே மற்ருெரு முனையிலிருந்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் வெகு வேகமாக நடைபெற்று வருகின்றன!

1965—ம் ஆண்டிற்குள் இந்தியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று அவர்களாகவே ஒரு விதி செய்துகொண்டு கதியற்றப் பிராந்திய மொழிகளின் பிராணனை வாங்குவதற்கும் திட்டமிட்டிருக்கின்றனர்.

—ஆனால் அவர்களது இந்த முயற்சி பெரும்பான்மையான ஓட்டுகளால் நிறைவேற்றப்பட்டது என்று நினைக்கிறீர்களா?

இல்லை!

அங்கே பெரும்பான்மையாக இருப்பவர்கள் வடக்கத்தியர்கள்!

இருந்தும் இந்தி பொது மொழியாக வேண்டுமென்பதற்கு அதிகப்படியான ஆதரவு இல்லை.

—இந்தச் சுவைமிக்க வரலாற்றினைச் சுருக்கத்தொகுத்து சென்னை 'இந்து' 18—8—57 இதழில் திரு செல்லசாமி என்பவர் கடிதம் எழுதியிருக்கிருர்:

அது இதோ:

"காலஞ்சென்ற டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 'மொழிவழி மாநிலங்கள் பற்றிய சில சிந்தனைகள்' என்ற நூலிலிருந்து ஒரு பகுதியை இங்கு குறிப்பிடுவது சரியானதே என்று கருதுகிறேன்; அவர் சொல்லுகிருர்:—

இந்தியாவுக்கான அரசியல் சட்ட நகல் பற்றி விவாதிக்கப்பட்டபோது, இந்தியை தேசிய மொழியாக ஏற்றுக்கொள்வது என்ற பிரச்சினையும் காங்கிரசுக் கட்சிக் கமிட்டிக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அப்போது என்ன நிகழ்ந்தது என்பதை நான் இங்கு கூறினல் அது ஒரு இரகசியத்தை வெளிப்படுத்துவதாக அமையாது என்று கருதுகிறேன். இந்த இந்தி பற்றிக் கூறுகிற 115-ம் பிரிவைவிட தகராறுக்காளான வேறு பிரிவே அரசியல் சட்டத்தில் கிடையாது. வேறெந்தப் பிரிவுக்கும் இதற்குத் தெரிவிக்கப்பட்டதைவிட அதிகமான எதிர்ப்பு தெரிவிக்கப்படவில்லை. நீண்ட விவாதத்திற்குப்பிறகு இந்தப் பிரச்சினைமீது ஓட்டெடுக்கப்பட்டது. சாதகமாக 78 ஓட்டுகளும், எதிராக 78 ஓட்டுகளும் பதிவாயின. சிக்கல் மீண்டும் தீர்க்கப்பட முடியாததாயிற்று. நீண்ட நாட்களுக்குப் பிறகு கட்சியில் இது மீண்டும் விவாதிக்கப்பட்ட பிறகு ஓட்டுக்கு விடப்பட்டபோது, எதிராக 77 வாக்குகளும், சாதகமாக 78 வாக்குகளும் பதிவாயின. ஒரே ஒரு ஓட்டு அதிகம் பெற்றுத்தான், இந்தி தேசிய மொழி என்று இடம் பெற்றது.

இது பலரது கண்களையும் திறக்க வேண்டும். சர்க்கார் தங்கள் விருப்பத்தை, சிறுபான்மையினர்மீது இந்தப் போக்கில்தான் பலவந்தமாகத் திணிப்பார்கள் என்ருல், எனது பிரார்த்தனை எல்லாம், ஆண்டவன்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்பது தான்.

...இப்போது செய்யக்கூடிய விவேகமான காரியமெல்லாம் சர்க்கார், இந்திக் குழு அறிக்கையைக் கட்டி மூலையில் வைத்துவிட வேண்டியதுதான்; இப்போதுள்ள நிலையே நீடிக்க வேண்டும் — ஆங்கிலத்திற்குப் பதில் பொது மொழியாக இந்திதானுக இடம்பெறும் வரையில்!"

கருவிலேயே சிதைந்த சிசுவைப்போல பிறக்கும்போதே செத்திருக்கிறது இந்தித் திணிப்புத் தீர்மானம்!

ஆனல் கட்சிக் கூட்டத்தில், ஆரம்பத்திலேயே தோற்றுப்போன இந்தித் திணிப்புத் தீர்மானம் ஒரு சில இந்தி வெறியர்களின் மனதைச் சாந்திப்படுத்துவதற்காகப் பின்னர் வலுக்கட்டாயமாக நிறைவேறியிருக்கிறது!

அவ்வளவு முயற்சிக்குப் பிறகு அந்தத் தீர்மானம் ஒரு ஓட்டு வித்யாசத்தில் வெற்றி பெற முடிந்திருக்கிறது.

ஒரு வோட்டு வித்யாசம்!

—பிராந்திய மொழிகளைக் காட்டிக் கொடுத்த அந்த மொழித் துரோகி யாரோ— தெரியவில்லை.

அய்யோ; 'நாடக'த்தை யாரும் கவனிக்கவில்லையே!



'ரேடியோ சிலோன்' நிகழ்ச்சிகள் இந்தியாவின்மீது திணிக்கப்படுவதைக் கண்டித்துப் பேசினர் கேஸ்கர்!

—சங்கர்ஸ் வீக்லி



திரிசங்கு சொர்க்கம்

எழுதியவா : மேதாவி

திலைப்புக்கும் கதைக்கும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லையென்றாலும், சிறந்ததொரு துப்பறியும் மர்மக் கதைதான் இது. கள்ளநோட்டுத் தயாரிப்பிலீடுபட்டு, வெளியில் பெரிய மனிதன்போல் நடித்துக் கொண்டு, நல்லவன் ஒருவன்மேல் தன் குற்றங்களைச் சுமத்தப் பார்த்த ஒரு நயவஞ்சகனின் நரிவேலைகளைத் துப்பறிந்து கண்டு பிடிக்கிறார் ஒருவர். விறுவிறுப்பும், வேகமும் நிறைந்த நடை; அடுத்து என்ன என்று ஆவலைத் தூண்டும் வகையில் அமைந்த கதைப்போக்கு! கதை நிகழுமிடங்கள் நமக்கு மிக அறிமுகமானவைதான்; ஆனால் சம்பவங்கள் பல நம்பத்தகாதவை. எனினும் "சுவாரஸ்யம்" என்கிறார்களே, அது நிறைய இருக்கிறது இந்த நூலில்.

விலை. ரூ. 1—50

சிந்தனையாளர் எமர்சன்

ஆசிரியர் : சிங்காரவேலு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வட அமெரிக்காவில் தோன்றி வாழ்ந்த சிறந்த சிந்தனையாளரான ரால்ப் வால்டோ எமர்சனின் வாழ்க்கை வரலாறு, அவர் எழுதிய சிறந்த நூல்கள் ஆகியவற்றை நல்ல பயன்தரும் வகையில தொகுத்தளித்திருக்கிறார்கள். அமெரிக்காவின் திருவள்ளுவர் என்று எண்ணத் தகும் நிலையில் உயர்ந்த பல கருத்துக்களை வழங்கியவர் அவர். அன்னாருடைய சிந்தனைச் செல்வத்தைத் தேவையான அளவு பயன்படுத்தித் தொகுத்து, அவரது மணிமொழிகளுக்குச் சரியாகத் தமிழில் உள்ள திறக்குறள், திருமந்திரம், மற்றும் கீதை முதலிய நூல்களின் வாக்கியங்களைக் காட்டியுள்ளது அரியதோர் முயற்சியாகும்.

விலை ரூ. 1—25

மேற்கண்ட இரு புத்தகங்களையும் வெளியிட்டோர் :

பிரேமா பிரசுரம், சென்னை—24

மனக் குரங்கு

எழுதியவர் : வித்துவான் நா. தேவநாதன்

கற்புநெறியென்பது பெண்களுக்கு மட்டும் உரித்தானதென்று கருதித் தவறான வாழ்க்கையில் ஈடுபடும் ஆண் வர்க்கத்தினர் திருமணம் ஆனபின்னும், கொண்ட மனைவியையும் அன்பு மக்களையும் துறந்து, பிறன் மனை விழைதல் என்னும் பெருங்குற்றத்திற்காட்பட்டு அல்லலுறும் நிகழ்ச்சிகள் நாட்டில் ஏராளம் நடந்த வண்ணமுள்ளன. அப்பேர்ப்பட்ட ஒரு சம்பவத்தை எடுத்துக் கொண்டு, ஆசிரியர் அழகொழுகும் எளிய தமிழ் நடையில் இக்கதையில் விவரித்துள்ளார். ஒரே மாதிரியான இச்சம்பவம் பலரது வாழ்விலும் நடைபெற்று, இறுதியில் அவர்களெல்லாம் தெளிவு பெற்றுத் திருந்தியதாகக் கூறப்போந்த ஆசிரியர் ஒன்றில் மற்றொன்றாகக் கடித முறையை நுழைத்திருப்பது ஓரளவு குழப்பத்தை இடையில் விளைவிக்கிறது. என்றாலும் இறுதியில் அச்சிக்கல்கள் விடுபட்டு, கதை ஒழுங்காக முடிவடைகிறது. அனைவரும் படித்துப் பயனெய்தும் அறிவுரை கொண்டது இந்நூல்.

விலை. ரூ. 1—50

கிடைக்குமிடம்: பாரி நிலையம், சென்னை—1

திருச்சி மாவட்ட தி. மு. கழக
அவசர செயற்குழுக் கூட்டம்

அன்புடையீர் !

வணக்கம். நாளது 25—8—57 ஞாயிறு பிற்பகல் 3—மணிக்கு மாவட்ட செயற்குழு அவசரக் கூட்டம் குளித்தலையில் மு. கருணாநிதி அவர்கள் தொகுதி அலுவலகத்தில் நடைபெறும். மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது வரவேண்டுகிறேன்.

பொருள் :

நங்கவரம் விவசாயிகள் அறப் போராட்டம்.

திருச்சி | 17—8—57. |

அன்பன்,
அ. பெ. தர்மலிங்கம்.
செயலாளர்,
மாவட்ட தி. மு. கழகம்.

பிறைவானம் . . .

※ 11-ம். பக்கத் தொடர்ச்சி

ஒரு தனி மனிதர்-தனக்கு இருக்கும் செல்வாக்கின் பலம்கொண்டு வாழ்வின் அடித் தளத்திலேயே உழன்றுகொண்டிருக்கும் ஒரு மாபெரும் விவசாயிகளின் சமுதாயத்தை தலை எடுக்கவொட்டாமல், உதைத்து—மிதித்துத்—துவைத்து வெறியாட்டம் போடுகிறாரே—என்ற நினைவால் காளிமுத்துவுக்குப் பண்ணையார் வேண்டாதவராக அப்போது தோன்றவில்லை! தனக்கு ஒரு திருக்குறள்கூட வாங்கிக் கொடுக்க இயலாத அளவுக்குத் தன் அப்பாவின் கையைக் கட்டிப் போட்டுவிட்டாரே-என்ற எண்ணம்தான் அவன் நெஞ்சிலே தோன்றி வதைத்துக்கொணடிருந்தது!

நேற்றுவரை, உழைத்தோம்; ஏதோ உண்டோம்-என்று வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்த சொக்கனன் குடும்பம் இன்று முதல் முறையாகப் பட்டினி கிடந்தது!

*　　*　　*

பட்டினி-நேற்றுவரை அது என்ன வென்றே உணராதவன் காளிமுத்து! அது கண்களை இருட்டும்; கால்களை செயலிழக்கச் செய்யும்; உடலை மயக்க நிலைக்கு இழுத்துச் செல்லும், இவ்வளவு கோரமான அது இனி தன் குடும்பத்தை விட்டகலாது-என்பதை இப்போது உணர்ந்து கொண்டான்.

"டேய் காளிமுத்து!..."

மாவடு ஒன்றை சுவைத்து—பசியை விரட்டிக்கொண்டிருந்த காளிமுத்து திரும்பிப் பார்த்தான்.

ஹேமா வந்துகொண்டிருந்தாள். "டேய் காளிமுத்து!... மரத்து மேலே ஏறி எனக்கும் பறிச்சுத் தாடா!"—காளிமுத்து 'சின்ன எஜமானி'யின், கட்டளையைத் தலைமேல் தாங்கிச் செயலாற்றவில்லை வழக்கம்போல்! ஹேமாவை ஏறிட்டு நோக்கினான். அவன் கண்களில் கோபம் பொறி பறந்து கொண்டிருந்ததை ஹேமா பார்த்து பயந்தே விட்டாள்!

"திருக்குறள் பாட்டு ஒன்று சொன்னீங்களே சின்ன எஜமானியம்மா; எங்கே, அதை மறுபடியும் சொல்லுங்க...!"—காளிமுத்துவின் பேச்சு ஹேமாவுக்குப் புதிராக இருந்தது.

"இப்ப இன்னொரு உழவர்பாட்டு எனக்குத் தெரியும் காளிமுத்து!... சுதந்த்ரப் போராட்ட நூற்றாண்டு விழா நடந்துதே, அதிலே நான் பாடினேனே! பாரதியார் பாட்டு அது...எங்க வீட்ல 'ரிக்கார்டு' கூட இருக்கு!... உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!..."—ஹேமா முடிக்கவில்லை! அதற்குள் தூரத்தில் ஏதோ கூச்சல் கேட்கவே இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர்.

அங்கே ஊர்வலம் ஒன்று வந்து கொண்டிருந்தது. 'பாண்டு' இசை முழங்க-பக்தகோடிகள் பல்லாயிரவர் புடைசூழ—ஆண்டவன் காற்று வாங்கப் புறப்பட்டகாட்சியல்ல அது!

ஒட்டிய வயிறும், உருமாறியத் தோற்றமும், 'பசி அரக்க'னின் கோரப் பாய்ச்சலால் எலும்புக் கூடுகளாக மாறிவிட்ட ஏழை உழவர் பெருமக்கள்தான் அங்கே அணி வகுத்து வந்துகொண்டிருந்தார்கள்! ஆமாம்; பட்டினிப்படைதான் பண்ணையார் பங்களா நோக்கி சென்றுகொண்டிருந்தது, "எங்கள் வாழ்வைப் பாழாக்கி வதைத்தது போதும்! வாழு; வாழவிடு!" என்று உரிமை முழக்கம் எழுப்பிக் கொண்டு!

காளிமுத்துவும் ஹேமாவை மறந்து அந்தப் பட்டினிப் படையின் பின்னால் நடந்தான்.

ஆனால் பலன் என்ன?

ஏழை உழவர்களின் வயிற்றெரிச்சல் எரிமலையாக வடிவமெடுக்கும் என்பதை உணராத பண்ணையார் பாம்பாகச் சீறினார். 'பார்க்கிறேன் ஒரு கை!' என்று பாய்ந்தார். 'செத்து மடியுங்கள்!' என்று மார்தட்டினார்!

பாடு பட்டுப் பண்ணையாருக்குப் பலன் குவித்த அந்தப் பரிதாபத்திற்குரிய விவசாயத் தோழர்கள் நடக்கவும் சக்தியற்று தள்ளாடித் திரும்பினர்.

*　　*　　*

அந்த நிலை மாறவே இல்லை!

சாக்காட்டுக்குப் பாதை தேடிக் கொண்டிருந்தார்கள் பாட்டாளிகள்!

பண்ணையார் எதற்கும் துணிந்தவராக ஏறு நடைபோட்டுக் கொண்டிருந்தார்!

விளைவு என்ன?

எத்தனை காலம் பட்டினி கிடப்பது? மண்ணிலே பொன் விளைத்த தோழர்கள் புண்ணான நெஞ்சுடன் எத்தனை நாள்தான் வாழ்வைக் கடத்த முடியும்?—இப்படிக் கூடிப் பேசினர் உழவர்களின் வாழ்வு முன்னேற்றமே தங்கள் கடமைஎனக் கருதும் தலைவர்கள்!

*　　*　　*

அன்று......அதிகாலை நேரம்!

மாமரத்தடியிலே இரைதேடி வந்த பறவைபோல் நின்று கொண்டிருந்தான் காளிமுத்து!

"காய் பறிக்க வந்தாயா, கபோதிப் பயலே! ஓடுடா ஓடு!......" என்று கர்ண கடூரமான குரல் எழுப்பிக் கொண்டு காளிமுத்துவின் கழுத்திலே கை வைத்து நெக்கித் தள்ளினான், பண்ணைக்குப் புதிதாக வந்திருந்த கூலி!

கண நேரம்தான்......

தள்ளப்பட்ட வேகத்தில் 'தடால்' என்று தூர ஓடி குப்புற விழுந்தான் காளிமுத்து! "ஐயோ!" என்று அவன் அலறிக்கொண்டு தலை தூக்கும் அதே நேரம், "வாழு; வாழவிடு!" என்ற பெரு முழக்கம் எழும்பியது!

காளிமுத்து குரல் வந்த திசை நோக்கினான்!

அங்கே...? உரிமைக் கொடியேந்திப் போராடப் புறப்பட்ட உழவர் பட்டாளம் அணிவகுத்து வந்து கொண்டிருந்தது!

"கேட்டது வாழ்வு;
கிடைப்பது சாவா?"

—இந்தக் கேள்விக்கு நல்ல முடிவு காண—வாழ வேண்டிய உழவர் பெருங்குடி மக்கள்—நிலத்திலேயிருந்து விரட்டப்பட்ட விவசாயத் தோழர்கள்—பண்ணையாரின் தடையை உடைத்து வயலில் இறங்க வைர நெஞ்சு படைத்து—படை ரூபத்தில் புறப்பட்டு விட்டார்கள்!

காளிமுத்துவின் கலங்கிப்போன கண்கள் கூர்ந்து கவனித்தன!

அதோ, படைவரிசையிலே அவன் தந்தை சொக்கன்; பக்கத்திலே பெற்ற அன்னை!

காளிமுத்து எழுந்தான்; உடல் வலியை மறந்தான்; பசியை மறந்தான்; ஓடினான்!

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்!
வீணில் உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்!"

—என்று பண்ணையார் வீட்டில் 'கிராமபோன்' எழுப்பிக் கொண்டிருந்த பாரதியாரின் கீதம்கூட எவர் காதிலும் விழவில்லை!

ஊர் நோக்கி விரைந்து கொண்டிருந்த போலீஸ் லாரிகள் எழுப்பிய 'ஹாரன்' சப்தம் கூட எவர் காதிலும் விழவில்லை!

ஆனால் "வாழு; வாழவிடு" என்ற உழவர் அறப்போர் முழக்கம் விண்ணை மோதியது! அதிலே—பெற்றோருக்கு மத்தியிலே குதித்து ஓடிவரும் நம் 'கதா பாலகன்' காளிமுத்துவின், 'பிஞ்சுக் குரலு'ம் கலந்திருந்தது!

—சொர்ணம்

(அடுத்த இதழில் முடியும்)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்!

—குறளுக்குப் பொருள் தெரிந்து படிக்கக்கூடிய வயதல்ல அவனுக்கு!

ஆனாலும் இந்த ஒரே ஒரு குறள் மட்டும் அவனுக்குத் தெரியும்—அதன் உள்ளே புதைந்து கிடக்கும் கருத்துதான் ஒரே குழப்பமாக இருந்தது அவனுக்கு!

"டேய் காளிமுத்து!...என்னடா செய்துக் கிட்டிருக்கே?...நான் இன்னிக்கு புதுசா ஒரு திருக்குறள் படிச்சிருக்கேன். தெரியுமா உனக்கு?..."

—என்று ஒருநாள் கேட்டுக் கொண்டே அவனிடம் வந்தாள் ஹேமா.

இந்தக் குரலைக் கேட்டதும் காளிமுத்து ஏனோ துள்ளிக் குதித்து எழுந்தான். வயலோர மாமரத்தடியிலே சாய்ந்து கொண்டு, கால்மேல் கால் போட்ட வண்ணம் வேடிக்கை பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த காளிமுத்து ஏன் அப்படி திடுக்கிட்டு எழ வேண்டும்?

அதற்குக் காரணம் விளக்கமாகத் தெரிய வேண்டியதில்லை! ஒரே வரியில் சொல்லிவிடலாம்—பேசிக் கொண்டு வந்த ஹேமா பண்ணையாரின் செல்வ மகள்!

"என்ன கேட்டீங்க எஜமானியம்மா?..." என்றான் காளிமுத்து பயபக்தியோடு!...

"குறள் தெரியுமாடா உனக்கு?..." —'சின்ன எஜமானி' தனக்குத் தெரிந்த ஒன்றை மற்றொருக்கும் உடனடியாகத் தெரிவித்துவிட வேண்டுமென்ற ஆவலில் கேட்டாள்.

"தெரியாதே!"—கையை விரித்தான் காளிமுத்து!

"இன்னிக்கு என் 'டியூஷன்' வாத்தியார் சொல்லிக் கொடுத்தாருடா! ஆனால், அதன் அர்த்தம் இன்னும் எனக்குப் புரியவேயில்லை ...கேளேன்; உழுது பயிர் செய்யிறாங்க பாரு, அவுங்கதான் உண்மையிலேயே வாழுறவுங்களாம்... மற்றவங்கெல்லாம் அவுங்களைத் தொழுது பின்னாலே நடந்துபோறவுங்களாம்......ரெண்டாயிரம் வருஷத்துக்கு முன்னாடி எழுதியிருக்காருடா வள்ளுவர்..."

"என்ன?"—ஏட்டோடு நின்று விட்ட அந்த உயர் எண்ணத்தை நம்பாதவன்போல் கேட்டான் காளிமுத்து!

"ஆமாண்டா!......என்னாலேயே நம்பவே முடியலே!...உங்க அப்பன், ரங்கன், சங்கன், மாரிமுத்து, சுடலைமுத்து, கருப்பண்ணன், செங்கண்ணன்—இவங்க எல்லாம் தான் உண்மையிலேயே உழைக்கிறவங்களாம்டா...! உயர்ந்தவங்களாம்டா...!"

காளிமுத்துவை நாடி ஹேமா வருகிறாள் என்றால் அது மாங்காயுக்காகத்தான்! குரங்குபோல மரத்தில் தாவி ஹேமாவின் கை நிறைய பறித்துக் கொடுப்பான். ஆனால், இன்றைய தினமோ ஹேமா அவனுக்கு அதற்கெல்லாம் பிரதிபலனாக ஒரு குறளைப் போதித்து விட்டுப் போய்விட்டாள்!

அன்று முதல் காளிமுத்துவின் நெஞ்சிலே ஆழப்பதிந்து விட்டது அந்தக் குறள்!

வயல் வெளிக்குத் தந்தைக்குக் கஞ்சிக் கலயம் தூக்கிச் செல்லும் நேரத்தில்—வயல் வரப்பிலே கீழே விழுந்து விடாமல் இங்குமங்கும் சாய்ந்து ஜாக்கிரதையாக நடந்து செல்லும் நேரத்தில்—கண்ணுக் கெட்டிய தூரம்வரை பச்சைப் பசேலென்று காட்சியளிக்கும் பயிர்க் கொல்லையைக் காணும் போது—எப்போதும் அந்தப்பிஞ்சு நெஞ்சின் அடித்தளத்திலே குடியேறவிட்ட அந்தக் குறள் அவனுக்குக் குழப்பத்தைத்தான் தந்து கொண்டிருந்தது.

உழவர் பெருங்குடி மக்கள்—

பாடுபடும் ஏழை விவசாயிகள்—

அன்றாடங் காய்ச்சிகள்—

இவர்கள்தான் உண்மையிலேயே உழைப்பவர்களாமே!

ஆனால் மாடோடு சேர்ந்து மாடென உழைக்கும் அத்தகையோர் இன்று எவ்விதம் இருக்கிறார்கள்? உண்மை உழைப்பாளிகள் அவர்கள்தான் என்றால் வறுமையில் உழன்று விழிகளில் நீர் நிறைய கேவல நிலையில் ஏன் அவர்கள் வாழ வேண்டும்?

இந்தக் கேள்விகள்கூட அவன் உள்ளத்திலே எழும்பும்!

விடை கிடைக்கக் கூடியனவா அவைகள்?

"கிராமங்கள்தான் நாட்டின் உயிர்—அதன் தாழ் நிலை இப்படியேதான் இருந்துவிட வேண்டுமா?" என்று காந்தியார் கேட்ட கேள்விக்கே இன்றுவரை விளக்கமான விடை கிடைக்கவில்லையே!

உலகமென்றால் என்ன; அதிலே உலவும் உன்மத்தர்கள்—கொடிய நெஞ்சு படைத்த துரோகிகள்—எத்தனைக் கோடிக்கானோர்—என்றெல்லாம் எதையுமே புரிந்து கொள்ள முடியாத அந்தச் சிறுவனுக்கா இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்கப் போகிறது?

கிராம மக்களின் முகங்களில் தான் எவ்வளவு கவர்ச்சி! கடும் வெய்யிலிலும் கடமையாற்றும் அவர்களது தோல் கருத்திருந்தாலும், உள்ளம்தான் எத்தனை வெண்மையாக — மென்மையாக இருக்கிறது! ஆனாலும் அவர்கள் வாழ்வைச் சுற்றியிருக்கும் கருமையோ எத்தனைக் கொடுமையாக இருக்கிறது!

'ஹேமா சொன்ன பாட்டில் உண்மையாக உழுது உழைப்பவர்கள் தான் 'உயர்ந்தவர்கள்' என்று இருந்ததே; இதுதான் உயர்வா?

'அப்பா வயலில் உழுகிறார்; வியர்வை சிந்தப் பாடுபடுகிறார்; உடல் வலியால் இரவெல்லாம் முனுமுனுக்கிறார்; புரண்டு புரண்டு படுக்கிறார்; பின் அலுப்பு தீர அயர்ந்து தூங்குகிறார்! அப்பா மட்டுமென்ன; அவனது குடிசைக்கு அருகிலே குடியிருக்கும் அத்தனை பேரும் அப்படித்தான் வாடுகிறார்கள்—ஏனெனில் அவர்கள் எல்லாமே 'உயர்ந்தவர்கள்!'

'ஆனால் உழைக்காமலிருக்கும் ஒருவரையும் நான் இங்கே பார்க்கிறேனே! அவர் 'தொழுதுண்டு பின் செல்பவராகத்தானே' இருக்க வேண்டும்! ஆனால் அவரை அல்லவோ மற்றவர்கள் தொழுகிறார்கள்! அதோடு மட்டுமல்ல; அவர் உழைப்பவர்களைத் திட்டுகிறாரே, ஏன்? அன்று கம்பு கொண்டு கழனியிலே உழைத்தவர்களைத் தாக்கினாரே, ஏன்? உழைப்பவர்களை — 'உயர்ந்தவர்'களைத் தாக்க அவருக்கென்ன அதிகாரம்? யார்கொடுத்த திமிர் அது?

—ஊர்ப் பண்ணையார்தான் இப்போது கொக்கிபோல் வளைந்து காளிமுத்துவின் கலங்கிப்போன நெஞ்சத்தின் முன்னே கேள்விக் குறியாகத் தொங்கிக்கொண்டிருந்தார்!

ஒருவேளை ஹேமா சொன்ன பாட்டிலே தவறு இருக்குமோ? இருக்கலாம்; இருக்கலாம்; குறளில்தான் பிழை இருக்கிறது!

—வழக்கமாக தான் அமர்ந்திருக்கும் மாமரத்தடியிலிருந்து இப்படி ஏதேதோ யோசித்த பிறகு எங்கேயோ எழுந்து ஓடினான், காளிமுத்து!

★

உழுதுண்டு வாழ்வாரே!

"அப்பா! அப்பா!......எனக்கு ஒரு திருக்குறள் புத்தகம் வேணும்ப்பா!..." என்று கத்திக் கொண்டே குடிசைக்குள் ஓடிவந்தான் காளிமுத்து!

ஆனால், தன் மழலைச் செல்வனின் குரல் எழுந்தால் தாவி அணைத்து மகிழும் தந்தை அகற்றப்பட்ட மவுண்ட்ரோட் வெலிங்டன் துரையின் சிலைபோல் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

"அப்பா! அப்பா! சின்ன எஜமானியம்மா குறளுன்னு என்னமோ சொன்னாங்க...அது ஒரே தப்பா இருக்குப்பா!...அதனால் சரிபாக்க எனக்கு ஒரு குறள் புத்தகம் வேணும்ப்பா! வாங்கித்தாப்பா!"—காளிமுத்து மீண்டும் கூறினான்.

அப்பா அசையவில்லை; தோளைப் பிடித்து உலுக்கினான் காளிமுத்து!

சொக்கன் அசைந்தான். ஆனால் ...அவன் கண்களில் ஏன் அத்தனை கலக்கம்? கண்ணீர் சிந்தக்கூடிய அளவுக்கு அவனுக்கு உற்ற துன்பம்தான் என்ன?

"அப்பா...... திருக்குறள்......"—என்று இழுத்தான் காளிமுத்து!

"திருக்குறள்! தெரு நாயினும் கேவலமாக வீதியிலே திரியப் போகும் உனக்கு அதுஒருகேடா?"—அப்பாதான் இப்படி ஆவேசம் வந்தவனைப்போலப் பேசினான்.

காளிமுத்து கணநேரம் ஏதும் புரியாமல் திகைத்து நின்றான்.

"அடுப்பிலேபூனை தூங்கும்வேளை—நம் அடிவயிற்றிலே தீ பாயும் நேரம் வந்து விட்டதடா வேக வேகமாக!...உன் படிப்புக்குமட்டு மல்ல;பசி எடுக்கும்போது வயிற்றுக்குள் ஊற்றுவாயே கஞ்சி; அதற்கும், நாளை உன் வாழ்வுக்கும் சமாதி கட்ட கச்சைக் கட்டிப் புறப்பட்டு விட்டாரடா பண்ணையார்!..."

"பண்ணையார்"—இந்தச் சொல் காதில் விழுந்ததும் திடுக்கிட்டு விட்டான் காளிமுத்து!

ஹேமாவின் அப்பா—உழைக்காமல் ஆனால் 'உயர்ந்தவ'ராக இருக்கும் அவர்தானே குறள் தரும் விதிக்கு விலக்காக இருக்கிறார்; அவர்தானே காளிமுத்துவை குறள் வாங்கி விளக்கம் பெறும் அளவுக்குத் துரத்தினார்! அந்தப் புரியாத புதிர்—தனது ஓட்டைக் குடிசைக்குள்ளே எங்கிருந்துவந்து புகுந்தது?

"என்னப்பா...ஏன் கோபமா இருக்கீங்க?..."

சொக்கு காளிமுத்துவைக் கட்டி அணைத்துக்கொண்டான் 'மகனே! பரம்பரை பரம்பரையாக இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி இந்த மண்ணிலே நாம் பட்ட உழைப்பு, பண்ணையாரின் மாளிகையை தான் உயர்த்திக்கொண்டு போனதே தவிர—அவரது உள்ளத்தை தாழ்நிலைக்குக் கொண்டுசென்று விட்டதடா; கண்ணே! நம் உழைப்பை எல்லாம் ஊதிவிட்டு 'வயலில் இறங்காதே!' என்று வஞ்சக வேலியிட்டு—நம் வாழ்வோடு விளையாட ஆரம்பித்து விட்டாரடா!"—சொக்குவின் கண்களில் நீர் துளிர்த்தது.

"ஏம்ப்பா? நீங்கள் எல்லாம் உழுதால் என்னவாம்?..."—காளிமுத்துவுக்கு சந்தேகம் தோன்றிவிட்டது.

காரணத்தை விளக்கினால் புரிந்து கொள்ள முடியுமா அவனால்? பரம்பரை உழவர்களுக்குச் சட்டம் துணைக்கு வந்து—நிறைய பலன் குவித்துவிடுவதாக ஜாடை காட்டி—தன்னுள்ளே ஓட்டையையும் கொண்டு விட்ட காரணத்தால்—மண்ணை நம்பியிருக்கும் உழவர்களின் மென்னியைநெறித்து ஒழிக்கப் பண்ணையாருக்கு வழி செய்து விட்ட சோகத்தைப் புரிந்துகொள்ளும் வயதா அவனுடையது?

ஆகவே, "கூலிக்கு வேறு ஊர்களிலிருந்து ஆட்களை அழைத்து வந்துவிட்டு நம்மை விரட்டுகிறாரடா பண்ணையார்!"...என்றான் சொக்கன்.

அப்பாவின் கலக்கத்திற்கும், அவனைப் போன்ற இரண்டாயிரம் விவசாயிகளின் குடும்பங்களது வயிற்றெரிச்சலுக்கும் கூலிக்கு மானத்தை விலைபேசும் அந்தக் 'கருங்காலி'கள்தான் காரணமென்றாலும், அவர்களுக்குப் 'பர்ராக்கு' கூறி பாதகம் செய்யத் தூண்டிவிட்ட எஜமானர்—பண்ணையார்தான் காளிமுத்துவின் கண்களின் முன்பே எதிரியாக நின்று கொண்டிருந்தார், அப்போது!

❊ 10-ம் பக்கம் பார்க்க

குருராஜா; அடையவரம்

(?) சென்னையில் வெள்ளைக்கார மன்றோ சிலைக்கு வெடி வைக்க முயன்ற நபருக்கு ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை கொடுத்திருக்கிறார்களாமே?

ஆமாம்; முன்பு இதே முறையைக் கையாண்டு, வெடிகுண்டு வைத்துத் தகர்க்க முயன்ற பகத்சிங் பிறகு தியாகியானார். அதுபோல வேதான் இந்த நபரையும் வருங்காலம் தியாகி என்று அழைக்க வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள், ஆளவந்தார்கள்!

(?) தண்டிக்கப் பட்டிருக்கும் அந்த நபர் மன்றோ சிலைக்குப் பதில் அந்த இடத்தில் குடியரசுத் தலைவர் ராஜேந்திரரின் சிலையை வைக்க வேண்டுமென்று கூறினாராம். மன்றோ குதிரைமீது இருப்பதாக சிலை இருக்கிறது. குடியரசுத் தலைவர் எதன்மீது இருப்பதாக சிலை அமைப்பது?

இதில் என்ன சிரமம் இருக்கிறது? குதிரைக்குப் பதில் காமராசரைக் குனிந்து கொண்டிருக்கச் சொல்லி; அதன்மீது, ராஜேந்திரரை இருக்கச் செய்வார்கள்; அதன்மூலம் இன்றைய அரசியலில் 'வடக்கு—தெற்கு' இருக்கும் நிலையை விளக்காமல் விளக்குவார்கள்!

உ. மா. வேலன்; திருவாரூர்

(?) 'நங்கவரம் போராட்டத்தை ஒரு கை பார்த்துவிடுவேன்' என்று ஒரு அமைச்சர் பேசினாராமே?

ஆமாம்; ஒரு கையால் ஓலி கிளப்ப முயல்பவர்கள் தானே! அப்படித்தான் பேசுவார்கள்!

தி. சுந்தரம்; பாலக்குறிச்சி

(?) ராவ்பகதூர் சம்மந்த (முதலியார்) அவர்களைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

நல்லவர்; அதைவிட மிகவும் துணிவானவர். இல்லாவிட்டால் தாயகப் பற்றற்ற ஆட்சியாளர்களின் முகத்திலடிப்பதுபோல சென்னைக்குத் தமிழ்நாடு எனப் பெயர் வைக்கவேண்டுமென்று பரிசளிப்பு விழாவில் பேசியிருப்பாரா?

விமலன்; சேத்துப்பட்டு

(?) நீங்கள் தெற்கு புறக்கணிக்கப்படுகிறது என்று கூறுகிறீர்கள். வடக்கே இருக்கும் அஸ்ஸாம்காரர்களோ அஸ்ஸாம் புறக்கணிக்கப்படுகிறது என்கிறார்கள். விளக்கம் தருவீர்களா?

வட நாட்டிலே உள்ள அஸ்ஸாம் மாநிலத்தில் அமைக்கப்பட இருந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அதே வட நாட்டிலுள்ள பிறிதொரு மாநிலத்திற்கு மாற்றியதற்காக அவர்கள் அஸ்ஸாம் புறக்கணிக்கப்படுகிறது என்கிறார்கள்!

நாமோ இந்திய உப கண்டத்தின் தென் பகுதிலுள்ள மாநிலங்களே புறக்கணிக்கப்படுகிறது என்கிறோம்.

—இதுதான் இவையிரண்டிற்குமுள்ள வித்யாசம்.

மேலும்; வட நாட்டிலுள்ள ஒரு மாநிலமே இன்னொரு மாநிலத்திற்கு விட்டுக் கொடுக்காவிட்டால், முற்றிலும் மாறுபட்ட தேசிய இனத்தைக் கொண்ட தென்னாட்டிலுள்ள மாநிலங்களுக்கு அந்த ஏக பாரத மனப்பான்மை எப்படி வர முடியும்?

—ஆக; இதனால் நமது பிரிவினைக் கொள்கை மேலும் வலுவடையத்தான் செய்கிறது!

ஜி. அருணகிரிநாதன்;
வேதாரண்யம்.

(?) 'நங்கவரம்' என்றால் என்ன?

தி. மு. கழகத்தின் தொழிலாளர் முகாம் நடத்தும் போராட்டம்! சிலர் சொல்வதுபோல கழகம் நடுத்தர வர்க்கத்தவரது இயக்கம் மட்டுமல்ல தொழிலாளர் இயக்கமும்கூட என்பதை நிலைநாட்டும் அடையாளம்!

ராஜாராம்; மேலநற்
கண்டார்கோட்டை

(?) நான் எந்தக் கட்சியையும் சேர்ந்தவனல்ல—என்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

கோழைகள்! புதுமை விரும்பும் கட்சிகளில் பற்று இருந்தாலும் வெளிக்காட்டப் பயப்படுபவர்கள்!

முக்கிய அறிவிப்பு!

23–8–57 முதல் குளித்தலை வட்ட நங்கவரத்தில் உழவர் அறப்போர் துவங்குகிற காரணத்தால், நான் தொகுதியில் தங்க வேண்டியிருப்பதை முன்னிட்டு ஒத்துக் கொண்டுள்ள வெளியூர் பொதுக் கூட்டங்கள், திருமணம், சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகள் முதலியவற்றில் கலந்து கொள்ள இயலாமைக்கு வருந்துவதோடு, விரைவில் வேறு தேதிகள் தந்து கலந்து கொள்கிறேன் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,
மு. கருணாநிதி

மன்றல் அழைப்பு

★

நிகழும் 30–8–58 (ஏவிளம்பி ஆவணி 14) வெள்ளிக்கிழமை காலை 8 மணி அளவில்

எனக்கும்
வழக்கறிஞர்
வெங்கட்டராமன்
பி. ஏ., பி. எல்., மகள்
தோழியர் லலிதாவுக்கும்
(ஆசிரியர், குருகுலம், திருமறைக்காடு.)

கலப்புத் திருமணம் மாயூரம் கோமதி திரைப் படமாளிகையில் நிகழும். மணவிழாவுக்கு, அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்து வாழ்த்துரைப்பார்கள் வந்து வைக்கு தமர் சூழ வருகை தந்து மன்றலைச் சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
(புலவர்) அறிவுடை நம்பி.
19. வடக்கு வீதி,
கூறைநாடு, மாயூரம்.

"முத்தாரம்"

சிந்தையைத் தொடும்
சிறுகதை சொல்வதில்;

செந்தமிழ் மணக்கும்
கட்டுரை தருவதில்;

செந்தேன் நிகர்க்கும்
நறுங்கவிதை பொழிவதில்;

எட்டுத்திக்கும் சென்று எழில்
எண்ணம் சேர்ப்பதில்;

தன்னிகரில்லா தனிப்பெரும் ஏடு!

"முத்தாரம்"

செப்டம்பர் இதழ் தயாராகிறது!

புலவர் குழந்தை
நாஞ்சில் கி. மனோகரன்
பி. சி. கணேசன்
ப. உ. சண்முகம்
கவிஞர் வாணிதாசன்
கவிஞர் முடியரசன்
முல்லை சக்தி
ஆகியோரின் எழுத்தோவியங்கள்!

ஆசிரியர் மு. க. வின் கவிதை நடைச்
சிறுகதை உண்டு!

[செப்டம்பர் இதழ் 3–9–57 அன்றே விற்பனைக்குக் கிடைத்துவிடுமாதலால், விற்பனையாளர்கள் ஆகஸ்ட் பட்டியல் தொகையை உடனடியாக அனுப்பிவிட வேண்டுகிறோம்.]

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவருமாம் மு. கருணாநிதி 'முரசொலி' அச்சகம், 4-128— மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.